Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஆண்டு சித்திரை மீ 28-ம் உ | செவ்வாய்க்கிழமை | (10 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 13 | ஓசை 51

## இலங்கைத் தமிழருக்கு உதவும் இந்தியா நாடு திரும்பிய இந்தியருக்கு உதவாததுஏன்?

(சென்னை)

கிழக்கிலும், வடக்கிலுமிருந்து வந்த தமிழர்களுக்கு இந்திய அரசு பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்ய முடியுமானால் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் தாய் நாடு திரும்பிய இந்தியர்களுக்கு ஏன் இந்திய அரசு அந்த அளவு பணத்தைச் செலவு செய்யக் கூடாது? தாய்நாடு திரும்பிய இந்தியத் தோட்டத் தொழிலாளர்களில் அநேகர் உதவியற்றவர்கள் இவ்வாறு சமீபத்தில் இந்தியா சென்றிருந்த கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ் தொண்டமான், இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலிடம் தெரிவித்ததாக ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு அனுப்பப்படாத 160,000 தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றி இந்தியாவும் ஸ்ரீலங்காவும் மிக விரைவில் (6ம் பக்கம் பார்க்க)

# ஜூன் ஏழுக்கு முன் மாகாணசபை கூடும்!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணசபையின் அமைச்சர் அபுயூசப் நேற்றுக் கொழும்புக்குத் திரும்பி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் பத்திரிகை நிருபர்கள் மாநாடொன்றை நடத்தினார்.

வடக்குக்கிழக்கு மாகாண சபையைக் கலைக்கவிடமுடியாதென்றும் ஜூன் மாதம் ஏழாந்திகதிக்கு முன்னர் வடக்குகிழக்கு மாகாணத்திலேயே மாகாணசபைக்கூட்டம் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாகவும் இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு இலங்கை அரசாங்கமே பாதுகாப்பு வழங்க வேண்டுமென்றும் அபுயூசப் தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள வடக்குகிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள்நாளை அல்லது மறுதினம் கொழும்பு திரும்புவார்களென்றும் ஜனாப் அபுயூசப் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின்ஐக்கியத்தைப் பாதுகாப்பதே தங்கள் நோக்கமென்றும் சட்ட பூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபையின் கூட்டத்தை சட்டபூர்வமாகக் கூட்டுவதற்கு இலங்கை அரசுதான் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் அபுயூசப் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் மட்டக்களப்பு எம். பி. சாம் தம்பிமுத்துவும் கலந்து கொண்டார்.

## லிகுவான் ராஜினாமா

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் பிரதம மந்திரி லீ குவான் லீ பிரதமர் பதவியிலிருந்து விலகப் போவதாக ஏலவே அறிவித்திருந்தார். இதேவேளை இவர் கட்சியின் (6ஆம் பக்கம் பார்க்க)

## புதைபட்ட நிலையில் ஷெல் கண்டுபிடிப்பு

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தின் முகப்பில் வெடிக்காத ஷெல் ஒன்று கூரைக்குள் புதைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையகற்ற முடியாதநிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

## சிறுவர் வேலைக்கு சேர்ப்பதை தடுக்க புதிய சட்டம்

(கொழும்பு)

பதினொரு வயதுக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகள் வீடுகளிலோ அல்லது தொழிற்சாலைகளிலோ அல்லது வேறு எங்கும் வேலைக்கு அமர்த்தப்படுவதைத்தடுக்க புதிய சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

இவ்வாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கல்ஸை மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

பிள்ளைகள் தொடர்ந்தும் தமது பாடசாலைக் கல்வியைத் தொடருவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர், பாடசாலைகளில் பிள் (6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிற்கு விசேட புகையிரத சேவை

(கொழும்பு)

மட்டக்களப்புக்கு புதுவருடத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவை கொழும்பு மாலை 5.30 க்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5 மணிக்கு கோட்டையை வந்தடையும்.

## நெடுந்தீவுக்கு அம்புலன்ஸ் படகு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களின் வசதி கருதி, நெடுந்தீவுக்கு ஒரு ''அம்புலன்ஸ்'' படகினை வழ

# வீரமரணமடைந்த சகல புலிகளின் நினைவாக நினைவு மண்டபம்!

(தருமபுரம்)

விடுதலைப் போராட்டத்தில் மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நினைவஞ்சலி அமைக்க விரும்பும் மக்களுக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் நேற்று அறிக்கை மூலம் ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளனர். அவ் அறிக்கை வருமாறு

வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளுக்கு தமிழீழ மக்கள் நிலையான நினைவுச் சின்னங்களை அமைக்க விருப்புற்றிருக்கிறார்கள் எதிர்காலத்தில் மக்கள் அவர்களை எண்ணிப் பார்க்கவேண்டும் என்றும் ஏற்றிப் போற்றப்பட வேண்டும் எதிர்காலத் தமிழீழத்தின் எழுச்சிக்கும் அவர்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் எண்ணுவது சரியே.

நிறைந்த பேரன்போடு வளர்த்த பிள்ளைகளைக்களத்தில் இழந்த பெற்றோர் அவர்களுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்பியாவது ஆறுதல் பெற நினைக்கிறார்கள்.

நாளைய தமிழீழத்துக்கும் வழிகாட்டிகள் இவர்களே என்பதால் இந்த மாவீரர்களின் நினைவைப் போற்றவேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாகவே உள்ளோம்.

ஏறக்குறைய 1400 விடுத (6ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் நள்ளிரவுவரை பேச்சு!

## இன்றிரவு பிரேமாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேறியபின் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்குமிடையில் நேற்றிரவு பூர்வாங்கப் பேச்சுக்கள் ஆரம்பமாகின இன்று பகல் முப்படைத் தளபதிகளுடன் நடைபெறும் பேச்சுக்களைத் தொடர்ந்து இன்று செவ்வாய்க்கிழமை இரவு ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் உத்தியோக ரீதியான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாக இருக்கின்றன.

நேற்றிரவு நீதி அமைச்சரும், இனப்பிரச்சினைச் சமாதானக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீதுடன, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்தினர். இப்பேச்சு

## புகையிரத சேவை

(கொழும்பு)
மட்டக்களப்புக்கு புதுவருடத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவை கொழும்பு கோட்டையிலிருந்து நடாத்தப்படவுள்ளது,

இந்த ரயில் 12 ஆம் திகதி இரவு 10.45 க்கு புறப்பட்டு மறுநாள் காலை 5 மணிக்கு மட்டக்களப்பைவந்தடையும்.

இந்த ரயில் 15 ஆம் திகதி மாலை 5.30 க்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5 மணிக்கு கோட்டையை வந்தடையும்.

இதேபோல புத்தாண்டை முன்னிட்டு 12 ஆம் திகதி காலை 10.45 க்கு விசேட கடுகதி ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பை மாலை சென்றடையும்.

## கலாசார உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம்

(கொழும்பு)
தமிழ் கலாசார உத்தியோகத்தர் பதவிகளுக்காக இந்து சமய இந்து கலாசார திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இது தொடர்பான விபரங்கள் இம்மாதம் ஆறாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 மேமாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பணிப்பாளர் இந்து சமய இந்துகலாசார திணைக்களத்துககு அனுப்பவேண்டும்.

## ஆர்வம் காட்டும் துறையில் பிள்ளைகள் படிக்க வேண்டும்!

— லலித்

(கொழும்பு)
ஒரு பிள்ளை எந்தத்துறையில் ஆர்வம் காட்டுகின்றனரோ அந்தத்துறையிலேயே அவர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

உயர்கல்வி அமைச்சில் உயர் அதிகாரிகள் மட்டக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

ஒரு பிள்ளை தான் விஞ்ஞானத்தை படிக்க விரும்புவதனால், அதற்கு அதில் பயிற்சி அளிக்க வேண்டும். அதைவிட்டு அந்தப்பிள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக்கு அம்புலன்ஸ் படகு

(நெடுந்தீவு)
நெடுந்தீவு மக்களின் வசதி கருதி, நெடுந்தீவுக்கு ஒரு ''அம்புலன்ஸ்'' படகினை வழங்கச் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. மக்களின் வசதியீனங்களை நேரில் அறிந்து கொள்ளச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சுவிற்சலாந்து தேசப் பிரதிநிதிகள் நால்வர் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர். பொதுமக்களுடன் கலந்துரையாடி நெடுந்தீவின் போக்குவரத்துக் கஷ்டங்களையும் கேட்டறிந்து கொண்டனர்,

(6ஆம் பக்கம் பார்க்க)

யைத் தொடருவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர், பாடசாலைகளில் பிள்

(6ஆம் பக்கம் பார்க்க)

சுக்கள் ஆரம்பமாகின இன்று பகல் முப்படைத் தளபதிகளுடன் நடைபெறும் பேச்சுக்களைத் தொடர்ந்து இன்று செவ்வாய்க்கிழமை இரவு ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் உத்தியோக ரீதியான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாக இருக்கின்றன.

நேற்றிரவு நீதி அமைச்சரும், இனப்பிரச்சினைச் சமாதானக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீதுடன, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரெட்னம் யோகி, விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்தினர். இப்பேச்சுவார்த்தை இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பொதுவான பிரச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த ஆண்டு 325கோடி ரூபா ஹிரோயின் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)
1989ஆம் ஆண்டு எழுபத்திரண்டு கிலோ நிறைவுடைய ஹிரோயின் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் ஊடாக கடத்திச்செல்லப்படவிருந்ததாக போதைப் பொருள் தடுப்பு பணியக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவற்றின் பெறுமதி முன்னூற்றி இருபத்தியெட்டுக் கோடி ரூபா எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக சடந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளைக் கோஷ்டியில் இளைப்பாறிய ஏ. எஸ். பி.

(நீர்கொழும்பு)
நீர்கொழும்புப் பகுதியில் மக்களைப் பயமுறுத்தியும், பெரும் களவுகளிலும் ஈடுபட்டிருந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்றை நீர்கொழும்பு ஏ. எஸ். பி. தலைமையிலான பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இக்கொள்ளைக் கோஷ்டி நீர்கொழும்பு, மாறவில்லை, வெள்ளப்புவா, சீதுவ ஆகிய இடங்களில் தன் கைவரிசையைக் காட்டியுள்ளதம்.

ஒரு இளைப்பாறிய ஏ. எஸ். பி., ஒரு அரசியல்வாதிக்கு மிக நெருக்கமான பாதுகாப்பு உததியோகத்தர், இராணுவ உததியோகத்தர் ஆகியோரும் இக் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்.

## இந்தியாவுடன் கொழும்பு உறவை வளர்க்க வேண்டும்

-ரெலோ கூறுகிறது

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வளர்த்து, இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளில் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ளும்படி, தமிழ்க்குழுவொன்று கொழும்பைக் கேட்டுள்ளது.

இந்தியா வடக்கிலும்-கிழக்கிலுமிருந்து தமது படையை மீள அழைத்துக் கொண்ட பிறகு, இந்தியாவுடனான உறவுகளை வளர்த்தல் பயன் பொருத்தமானதென, கொழும்பில் சென்ற வியாழன் ரெலோ வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கும் எமது நாட்டுக்கும் இடையிலான பண்பாட்டு, வரலாற்றுத் தொடர்புகளைப் பலப்படுத்த முயற்சி எடுக்கும் காலம் இதுவென்றும், இந்தியாவுடனான உறவுகளில் புதிய அத்தியாயத்தைத் திருப்பவேண்டுமென்றும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஆயுதம் பறிக்க வந்தோரிடம் நவீன ஆயுதம் பறித்தோம்

(பூநகரி)
''நாங்கள் ஆயுதம் பறிக்க வந்தோரிடம் (விடுதலைப் புலிகள்) நவீன ஆயுதங்களைப் பறித்தோம் எம்மை அழிக்க வந்தார்கள் நாம் மக்கள் ஆதரவுடன் வளர்ந்து வருகின்றோம். இந்திய இராணுவம் இழப்பு 1500 மேல், கை, கால்கள் இழப்பு 2500 மேல், செலவழிப்பு பல கோடி, கண்ட பலன் ஒன்றுமில்லை''

இவ்வாறு கடந்த சனிக்கிழமை அறு முழங்காவில் மைதானத்தில் நடைபெற்ற சிற்றூர் அவைக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட கட்சி அமைப்பாளர் திரு. பரமமூர்த்தி தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சுரேஸ் தலைமை

(6ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவுவரை மீனவர் செல்ல அனுமதி வேண்டுமாம்!

கம்யூனிஸ்ட் மாணிக்கம் கூறுகின்றார்.

(சென்னை)
தமிழக மீனவர்கள் தமிழ் நாட்டுக் கடலில் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாதிருப்பதாகவும் சில தினங்களுக்குள்ளாகவே இரண்டு தடவைகள் விடுதலைப் புலிகளினால் அவர்கள் பிடிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களென்றும் இதனால் கச்சதீவுக்கு தமிழக மீனவர்கள் சென்று வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாட்டுக்கிளை தலைவர் பா. மாணிக்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்

## 1983இல் இருந்து மாதாந்தம் 18இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது

- கனகரட்னம்

(யாழ்ப்பாணம்)
எமதுஇந்தஸ்தாபனத்திற்கு 1983 ஆம் ஆண்டிலிருந்து ஒரு மாதத்திற்கு சராசரி பதினெட்டு லட்சம் ரூபா என்ற வீதப்படி நட்டம் ஏற்பட்டு வந்துள்ளது. இந்நிலை டீசல்விலை அதிகரிப்பு டயர்கள் விலை அதிகரிப்பு ஊழியர்கள் தொடர்ந்து ஒரே சம்பளத்தில் வாழ்க்கையைஓட்ட முடியாத நிலையால்சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டியநிலை ஏற்பட்டமை உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரித்த அதே நேரம் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாமை பஸ்கள் தட்டுப்பாடு போன்ற காரணங்களினாலேயே இந்நட்டம் இருந்துவந்தது. இவற்றுடன் இப்பொழுது இந்தியஇராணுவம்எமது நாட்டை விட்டு விலகியபின் நாம் செய்த மதிப்பீடுகள் எமக்கு இருபது கோடிரூபாபெறு

(6ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்கங்கள் மக்களை சுரண்டுவதை அனுமதியோம்

-டொமினிக்

(யாழ்ப்பாணம்)
இன்று எமது மக்கள் இரண்டு அரசுகளுடன் போராட்டம் செய்து மிகவும் களைப்புற்ற நிலையில் உள்ளனர் அகதிகளாகி வீடற்று வாழ்வுக்கு வழிதெரியாது தவிக்கும் இவ்வேளையில் கூட்டுறவுச் சங்கங்கள் தவிச்சமுயல் அடிப்பது போன்று மக்களைச் சுரண்டுவதைநாம் இம்மியளவும்ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் டொமினிக் அவர்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளர் ராஜன் தலைமையில் நடை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M NO 777
K. K. S. ROAD, JAFFNA.
(B/746)

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna.
B/538

### சேவை

எம்மிடம் சகல சமயத்தையும் சேர்ந்த உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் உண்டு. நீங்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். மணப்பந்தல் இல 79 யாழ் வீதி வவுனியா. R/95

லண்டன் Pitman Typing, Shorthand யூலை 90 பரீட்சைக்குத் தோற்ற விரும்புவர்கள் 14.04.90இற்கு முன்பு எம்மிடம் தொடர்பு கொள்ளவும், Bond Institutes 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். B 751


## 25வது ஆண்டு விழா

(கரவெட்டி)

அல்வாய் பாரதி சனசமூக நிலையம் தனது 25 வது ஆண்டு நிறைவையொட்டி இன்று திங்கள் முதல் புதன்கிழமை மூன்று நாள் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

மின்னொளியில் நடைபெறும் மேற்படி போட்டியில் யாழ். மாவட்டத்தைச்

# சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் சீருடையின்றி தாதிகள் வேலை

(அம்பாறை)

சம்மாந்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமை புரியும் தாதிகள் யார் என்பதை இனம் கண்டு கொள்வதில் நோயாளர்கள் பெரும் சங்கடத்துக்குள்ளாகின்றனர்.

இந்த அவல நிலை எப்போது மாறும்; உரிய அதிகாரிகள் இதில் கவனமெடுப்பதில்லையா? எனவும் நோயாளர்கள் கேட்கின்றனர். இங்கு கடமையாற்றும் தாதியர்கள் தங்களுக்குரிய சீருடையில் இல்லாது விதம் விதமான உடைகளை அணிந்து வருகின்றனர்.

''உங்களைத் தாதியர்கள் என அடையாளம் காண முடியவில்லையே. ஏன் இப்படி உடை அணிகிறீர்கள'' என ஒரு நோயாளி, ஒரு தாதியைப் பார்த்துக் கேட்டபோது, ''இது எங்கள் கலாசாரம்'' எனப் பதில் கிடைத்ததாம்.

ஏனைய வைத்தியசாலைகளில் இப்படியான கலாசார உடைகள் அணியவில்லையெனவும், இங்கு மாத்திரமே கலாசாரம் பிரதிபலிக்கின்றது எனவும் பேசிக் கொள்ளப்படுகின்றது. எது எப்படியிருந்தும், வைத்தியசாலைக்கு வரும் வெளிநோயாளிப் பெண்களுக்கும், தாதியர்களுக்கும் வித்தியாசம் காணக்கூடிய வகையில் தாதியர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சீருடைகளை அணியச் சுகாதாரப் பகுதியின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (48)

## குடிநீர். மின்சாரம் இன்றி

# வீடமைப்புச் செயலகத்தில் ஊழியர்கள் பெரும் அவதி

(கொழும்புத்துறை)

மீண்டும் யாழ். வீடமைப்புச் செயலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ள அலுவலகங்கள் அனைத்திற்கும் மின்சாரம், குடிநீர் வசதியின்றி ஊழியர்கள அவதியுற்று வருகின்றனர்

இவ்வீடமைப்புச் செயலகக் கட்டிடத்தில், பனை அபிவிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயம், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், மாகாண வீடமைப்புத் திணைக்களம், தேர்தல் திணைக்களம் ஆகியன தற்போது செயற்படுகின்றன.

தற்போது இக் கட்டிடம் மின்சாரம்' சுகாதாரம், குடிநீர் விநியோகங்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையிலும், புனரமைப்புச் செய்யபபட வேண்டியுமுள்ளதால், ஊழியர்கள் தண்ணீர்த் தாகத்தால் தவிக்கின்றனர்

முன்னர் தேசிய வீடமைப்புத் திணைக்களம் இக்கட்டிடத்துக்குப் பொறுப்பாக இருந்தது.

பிரஸ்தாபக் கட்டிடம் தற்பொழுது யாருக்குரியது என்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளதால் சுகாதாரம். மின்சாரம் குடிநீர் விநியோக வேலைகளையும் எப்படிச் செய்வது என்ற பிரச்சினைகளும் எழுந்துள்ளன. (24)

## உதவி அரசஅதிபருக்கு பாராட்டு வைபவம்

(தீவுப்பகுதி)

வேலணை பிரதேச சபையின் விசேட ஆணையாளராகக் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச்சென்ற வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் சடாட்சர சண்முகதாஸனுக்கு விருந்துபசாரமொன்று நடாத்த பிரதேச சபை உத்தியோகஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இனறு 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேலணைப் பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தி

## கிளைகள் அங்குரார்ப்பணம்

(அம்பாறை)

கல்முனைத் தொகுதியிலுள்ள கிராமங்கள் சிலவற்றில் விடுதலை புலிகள் மக்கள் முன்னணியின் கிளைகள் அங்குரார்ப்பண வைபவங்கள் நடைபெற்று நிர்வாகிகள் தெரிவும் மக்களால் நடாத்தப்பட்டது. (இ)

அங்குரார்ப்பண வைபவங்களுக்கு மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தலைமை தாங்கினார். இக் கிளைகளுக்கு 20 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டு இதிலிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# மரங்களை வெட்டுவதால் மழைவீழ்ச்சி குறைகிறது

## ஏறாவூர் உதவி அரச அதிபர்

விவசாயிகளாகிய அனைவரும் மிகவும் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம் காட்டு மரங்களை எந்த ஒரு காரணத்தைக் கொண்டாவது அழித்தல் கூடாது. அவ்வாறு மரங்களை வெட்டுவது நமது நண்பனை நாமே வெட்டுவதற்குச் சமனானதாகும்'

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு நாள் விவசாயிகளுக்கான கருத்தரங்கின்போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் திரு. கனகரெத்தினம் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் கடந்த 1978 ஆம் ஆண்டுக்கு முன்பு எமது பகுதியில் மாதம் மும்மாரி மழை பெய்தது. எமது பகுதி எங்குப் பசுமை கொஞ்சும் பிரதேசங்களாகக் காட்சி அளித்தது. விவசாயம் நீரின்மையால் பாதிக்கப்படவில்லை

ஆனால் சூறாவளியின் கோரத் தாண்டவத்துக்குப் பின்பு எமது காடுகள் அழிந்து போனது. அதனைத் தொடர்ந்து எமது பகுதியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ராணுவ நடவடிக்கை காரணமாகவும் எமது காடுகள் அழிந்தது. இதனால் மழை மிகக் குறைவாகவே பெய்கின்றது.

இந்த நிலையில் நாம் ஒவ்வொருவரும் மரக்கன்றுகளை நட வேண்டும். எமது வறண்டு கிடக்கும் இப்பிரதேசத்தைப் பசுமையாக்க நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். இவ்வாறு செய்வதனால் விவசாயத்தில் அதிக விளைச்சலைப் பெறலாம் என்றார்.

# கணவரின் கொலைக்கு நாம் தான் காரணம்

## - சந்திரிக்கா

(கொழும்பு)

என்னையும் எனது பிள்ளைகளையும் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தல் கடிதங்கள் வந்தன. அதனால் நான் நாட்டைவிட்டு வெளியேறினேன். நான் அரசியலில் பிறந்து அரசியலில் வளர்ந்தவள். தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடவுள்ளேன் என்று தனது கணவரின் கொலைக்கும் பிற்பாடு இங்கிலாந்தில் இரண்டு வருடங்கள் வாழ்ந்து நாடு திரும்பியுள்ள திருமதி சந்திரிக்கா விஜெய குமாரணதுங்கா தெரிவித்தார்.

சந்திரிகா தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், எனது தந்தையின் மரணத் ன்போது எனக்குப் பதினாறு வயது. எனது தந்தை என்னைத் தனது மடியில் இருத்தி அரசியல் சொல்லித் தருவார். என்னை அரசியல்வாதியாக்கப் போவதாகவும் சொன்னார் என்றார்.

தனது கணவனைப் பற்றித் தெரிவிக்கையில், தனது குடும்பத்துக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு தமது கட்சித் தலைவர்களே காரணமென்றும், தான் தனது குடும்பத்துக்குப் பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றிப் பிரஸ்தாபித்தபோது, கட்சித் தலைவர்கள் அதில் கரிசனை காட்டவில்லை என்றும், தாம்தான் அவரின் கொலைக்குக் காரணம் என்றும், பயிற்றப்பட்ட தனிப்பட்ட மெய்ப்பாதுகாப்பாளரைத் தான் அமர்த்தியதாகவும், சம்பவம் நிகழ்ந்ததும் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், ஒரு பெண்ணின் உதவியுடன் தன் கணவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம் என்றார்.

அவர் பிள்ளைகளைப் பற்றிக் கேட்டபோது, ஸ்ரீலங்காவில் உள்ள பள்ளிக்கூடங்களும் இங்கிலாந்திலுள்ள பளளிக் கூடங்களைப் போல் கற்பித்தற் தொழிலைச் செய்யக் கூடியவை என்றும், மிக விரைவில் தனது பிள்ளைகளைச் ஸ்ரீலங்காவுக்கு கொண்டு வரவுள்ளதாகவும், தமது குடும்பத்தில் அரசியல் போதுமென்றும் தனது பிள்ளைகள் அரசியலில் ஈடுபடுவதைத் தான் தடுக்க விரும்புவதாகவும்,

## இலவச கண்பரிசோதனை

(அம்பாறை)

நிந்தவூர் முஸ்லிம் மாணவர் சம்மேளன ஆதரவில் நிந்தவூர் வடக்கு அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையில் கடந்த ஞாயிறு, திங்கள் இருதினங்களில் காலை 9-00 மணிமுதல் பிற்பகல் 2-00மணிவரை கம்பஹா ஒப்டிகல்ஸ் ஸ்தாபனத்தினர் கண்பரிசோதனை நடாத்தினர். (48)


யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30, 2.30, 6.30
சிவகுமார்-சுஜாதா நடித்த
அன்னக்கிளி
(புதியபிரதி)

103 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
103 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


## கூட்டுறவு ஊழியர் சுற்றுலாச் செல்வர்

(வேலணை)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றி வருகின்ற தொழிலாளர்கள், பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் கொண்ட குழுவொன்று சென்றவாரம் அகில இலங்கை ரீதியிலான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு சென்றுள்ளது.


### வீடியோ உரிமையாளர்களுக்கு

யாழ் மாவட்டத்திலுள்ளசகல வீடியோ சென்ரர் உரிமையாளர்களையும் தொலைக்காட்கி ஒளிபரப்பாளர்களையும் 1990 - 04 - 11 (புதன்கிழமை) காலை 11 மணிக்கு "நிதர்சனம்" தலைமை அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்

"நிதர்சனம்"
234, இராமநாதன் வீதி
திருநெல்வேலி,

### திரைப்பட அரங்கு உரிமையாளர்களுக்கு

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திரைப்பட அரங்கு உரிமையாளர்களையும் மினிசினிமா உரிமையாளர்களையும் 1990 - 04 - 11 (புதன்கிழமை) காலை 10 மணிக்த "நிதர்சனம்" தலைமை அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

"நிதர்சனம்"
234, இராமநாதன் வீதி
திருநெல்வேலி,

பெறும் மேற்படி போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பல கலந்து கொள்ளவுள்ளன. (18)

ணைப் பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் திரு. த, அருணாசலம் தலைமையுல் இது நடைபெறவுள்ளது (5)


திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். B/75


சியலில் ஈடுபடுவதைத் தான் தடுக்க விரும்புவதாகவும், ஆனால் அவர்களைக் கட்டாயப்படுத்த தமக்கு விருப்பமில்லை என்றார்.


திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். B/753

அனைவருக்கும் தமிழ்-சிங்கள புதுவருட வாழ்த்துக்கள்

# செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

189A, 218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்
ஓடர்கள் குறிந்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

B/560

அனைவருக்கும் தமிழ்-சிங்கள புதுவருட வாழ்த்துக்கள்

நவீன வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் கிடைக்கும்
ஓடர் நகை 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

# புதிய தங்க மாளிகை

76, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்

T'Phone: 24795

(549)

அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்

தங்கப் பவுண் நகை வியாபாரம்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (B.533)

# நேபாளத்தில் பல கட்சி ஆட்சி முறைக்கு மன்னர் சம்மதம்; ஆர்ப்பாட்டம் நின்றது

## அரசியல் கட்சிகள் மீதான தடையும் நீக்கம்

(காட்மண்டு)

நேபாளத்தில் பலகட்சி ஆட்சிமுறை ஒன்றை விரும்பி நேபாளிய காங்கிரசும், ஐக்கிய இடதுசாரி முன்னணியும் விடுத்த கோரிக்கையை ஏற்பதற்கு நேபாள அரசர் பிரேந்திரா இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேபாள வானொலியும், தொலைக்காட்சியும் இதனை ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. மன்னர் பிரேந்திராவுக்கும் நேபாள காங்கிரஸ் தலைவர்கள் ஜே. ஜி. பத்தராய் மற்றும் ஜி. பி. கொய்ராலாவுக்கும் ஐக்கிய இடதுசாரி முன்னணி தலைவரான திருமதி சகானா பிரதாப் ஆகியோருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சு வார்த்தையின் பின்னரே மன்னர் பிரேந்திராவின் இணக்கம் பற்றிய அறிவிப்பு இடம்பெற்றது.

இவ்அறிவிப்பின் பலனை நேபாள காங்கிரசும், ஐக்கிய இடதுசாரி முன்னணியும் தங்களது எதிர்ப்பு இயக்கத்தை கைவிடுவது என்று முடிவு செய்திருக்கின்றன. இதற்கு முன்னதாக இவர்கள் பல கட்சி ஆட்சி முறைபற்றி மட்டுமே தாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராக உள்ளோம் என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

மேலும் அரசியல் கட்சிகள் அமைப்பதன் மீதான தடைகளும் நீக்கப்பட்டுவிட்டது. நேபாள நாட்டு அரசியல் சாசனத்தில் இருந்து 'கட்சி சார்பற்ற' என்ற சொல்லும் அகற்றப்பட்டு விட்டது.

இதேவேளை நேபாள மன்னரின் அறிவிப்பானது மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது இதைக் கொண்டாட இவர்கள் பட்டாசுகளைக் கொளுத்தியும், உயர்ந்த கட்டிடங்களின்மேல் நின்று ஆர்ப்பாட்டம் செய்தும் வெளிப்படுத்தினர்.

கடந்த ஆறுமாத காலத்திற்கும் மேலாக பஞ்சாயத்து ஆட்சிமுறையைத் எதிர்த்து நேபாள காங்கிரசும், ஐக்கிய இடதுசாரி முன்னணியும் பல போராட்டங்களை நடாத்தி வந்தது. அத்துடன் இக்கட்சியின் தலைவர்கள் வீட்டுக் காவலிலும், சிறையிலும் வைக்கப்பட்டனர். ஏறத்தாள 100க்கும் அதிகமான மக்கள் உயிர் இழந்துள்ளனர்.

## குற்றவாளிகளை பிடித்ததால் சப். இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

(கொழும்பு)

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் வழங்கப்படும் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகிய விடயங்களில் அரசியல்வாதிகளின் தலையீட்டுக்கு இனிமேல் இடமளிக்கக் கூடாது என ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா சமீபத்தில் வலியுறுத்தியிருந்தார். ஆனால், சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாதது போல் கிழக்கு மாகாணத்தில் ஒரு சம்பவம் நடந்துள்ளது.

அம்பாறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தமிழ் தேசிய இராணுவம் புதைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் கண்டுபிடிக்க காரணமாயிருந்தார். இவ் ஆயுதங்களில் ஆர். பி. ஜி. களும் அடங்கும்.

சொற்ப நாட்களுக்கு முன் இதே இன்ஸ்பெக்டர் கள்ளத்தனமாக காட்டு மரங்களைக் கடத்தியவர்களையும் மடக்கிப்பிடித்துள்ளார். இதற்காக இவருக்கு அளிக்கப்பட வேண்டிய வெகுமதியும் வழங்கப்பட வில்லை. அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமாக மரம் கடத்தியவர் முக்கியமான அரசியல்வாதி ஒருவரின் கையாளாம். இதனால் கடமையே கண்ணாயிருந்து செயற்பட்டமைக்காக இவருக்கு கிடைத்த ''வெகுமதி'' தெற்கில் தங்காலைக்கு இடமாற்றம். ஐலன் பத்திரிகை செய்தித் துணைக் கொண்டு இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

## புனர்வாழ்வு நிவாரணம் ஸ்தம்பித நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியால் வழங்கப்பட்ட புனர்வாழ்வு நிவாரணம் தற்போது ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளதாக அப்பகுதி ஊழியர்கள்தெரிவிக்கின்றனர்.

இதனால் இறந்தோர் மற்றும் கடந்தகால வன்செயல்களில காயமடைந்தோரின் உறவினர்கள் செயலகத்திற்கு அடிக்கடி வந்து நிவாரணம் பற்றி வினவும் பொழுது தொடர்ந்து நிவாரணம் வழங்கப்படாமை குறித்து தகுந்த காரணங்கள் எதுவும் அதிகாரிகளால் வழங்கப்படவில்லை என்றும் சாட்டுப் போக்குகள் சொல்லி மழுப்புகின்றனர்என்றும் செயலக ஊழியர்கள் தெரிவித்தனர். (லோ)

## குஜராத்தில் வன்செயல் தொடர்கிறது; 15 பேர் பலி!

இந்தியாவில் அகமதாபாத் நகரத்தில் கடந்த நான்கு நாட்களாக இரு பிரிவினருக்கிடையே கலவரம் தோன்றி, கைகலப்பு கத்திக் குத்து ஏற்பட்டதில் 15 பேர் கொல்லப்பட்டார்கள்.

அகமதாபாத்திலுள்ள சேனைப் பகுதியிலேயே இவ் வன்முறைக் கலவரங்கள் ஆரம்பித்தன. வெள்ளிக்கிழமை நடந்த வன்முறையில் 11பேர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர். கலவரத்தை அடக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். வன்முறைகளை அடக்க அயல் மாநிலங்களில் இருந்து பொலிஸ் அதிகாரிகள் கொண்டு வரப்பட்டனர்.

கடந்த பத்து நாட்களாக குஜராத்தில் சிறு சிறு பகுதிகளில்இனக்கலவரங்கள்மூண்டு பின்னர் தலை நகரத்திலும் இடம் பெறத் தொடங்கலாயிற்று. இதனால் அகமதாபாத்தில் கால வரையறையற்ற ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. மக்கள் அச்சம் அடைந்து காணப்படுகின்றார்கள்.

இக்கலவரங்கள் பற்றி கருத்துத் தெரிவித்த குஜராத் மாநில சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் இச் சம்பவங்கள் ஆனது அரசுக்கு எதிரானவர்களினால் தொடங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியும் ஜனதா தளமும் சேர்ந்து கூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைத்ததாகவும், இதுவரை காலமும் அரச பதவியில் இருந்த இந்திரா காங்கிரஸ் தோல்வியடைந்ததாலும், இவ் அரசாங்கத்திற்கு பங்கம் விளைவிக்க இங்கு இனக் கலவரங்களை மூட்டி விடப்பட்டிருக்கின்றன எனக் கூறினார்.

## பறோடாவில்இந்து-முஸ்லிம்கலவரம்

(டில்லி)

மேற்கு இந்திய நகரமான பறோடாவில் சனியன்று நடந்த இந்து - முஸ்லிம் மோதலொன்றில் 26 பேர்

தனால் பல இடங்களில் பொலிஸ் காலவரையின்றி ஊர் அடங்குச் சட்டம் பிறப்

## பெண்கள்சுயதொழில்முயற்சியில் ஈடுபட முன்வரவேண்டும்

(பருத்தித்துறை)

''பெண்களின் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்தி அவர்களின் வாழ்வை வளம்படுத்த பேறூட் நிறுவனம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இப் பகுதி பெண்சளுக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாகும். நாட்டின் அபிவிருத்தி மேம்பாட்டிலும் சமுதாய எழுச்சியிலும் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.''

மேற்கண்டவாறு, பேறூட் கிராம அபிவிருத்தித் திட்ட தயாரிப்புகளின் கண்காட்சியையும் மலிவு விற்பனையையும் ஆரம்பித்துவைத்து உரையாற்றிய மேலைப் புலோலி மாதர் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி பாலகிருஸ்ணன் குறிப்பிட்டார்.

புலோலி பேறூட் நிறுவனத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு திரு. எஸ் ஆழ்வாப்பிள்ளை தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய அவர்:

''விஞ்ஞான நாகரீக மாற்றங்களுக்கேற்ப பெண்களும்

## இந்திய மீனவர் திருப்பி அனுப்பப்பட்டனா

(தீவுப்பகுதி)

குடாநாட்டு கடற்பிரதேசங்களில் அத்து மீறிப் பிரவேசித்து மீன்பிடித்த, எழுபத்தைந்துக்கு மேற்பட்ட இந்திய மீன்பிடி றோலர்களையும் அதனுடன் வந்த மீன்பிடியாளர்களையும் நேற்று காலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் குறிகட்டுவான் துறையில் வைத்து இந்தியாவிற்கு திருப்பி அனுப்பிவைத்தனர்.

திருப்பி அனுப்பும் இந்த நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி பிரிவினர் கலந்துகொண்டனர். தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இப் பிரதேசங்களுக்கு வரக்கூடாதென அறிவுறுத்தப் பட்டனர். இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையால் குடா நாட்டு மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதுடன் அவர்களது மீன்பிடி வலைகளையும் இவர்கள் றோலர்களால் சேதப்படுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (15)

## கணக்குப் பதிவாளர் தொழிற் சங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழி மூலம் உள்ளூராட்சிச் சேவைகள் கணக்குப் பதிவாளருக்கான தொழிற்சங்கம் ஒன்று இதுவரை காலமும் இயங்காத காரணத்தினால் தமிழ் கணக்குப் பதிவாளரின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருந்து வருவதை நீக்குமுகமாக இன்று திங்கட்கிழமை யாழ். மாநகர சபையின் கணக்குப் பகுதியில் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ். மாநகரசபை கணக்காளர் க. தனரஞ்சிதராஜா தலைமையில் இடம்பெற உள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ் கணக்குப் பதிவாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கும்வழிகள் ஆராயப்பட உள்ளன. (லோ)

## கொக்காவிலில் கொம்பன் யானை

(முறிகண்டி)

கிளிநொச்சிக்குச் சமீபத்தில் கொக்காவில் என்ற இடத்தில் முன்னர் இராணுவமுகாம் இருந்த இடத்திலிருந்து அரை மைல் தூரத்தில் பெரியகொம்பன் யானை ஒன்று இறந்து

## நாவாந்துறைக்கு புதிய கிராமசேவகர்

(முஸ்லிம் வட்டாரம்)

நாவாந்துறை வடக்கு கிராமசேவையாளர் திரு. பீற்றர் இமானுவேல் யாழ். புதிய சோனகதெரு கிராம சேவையாளராகவும் பதவியினை ஏற்றுக்கொண்டுள்ளார்.

08.04.90 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவர் புதிய சோனகதெரு ஜனசக்தி குழுக்களையும், சனசமூக நிலையம், மற்றும் சங்கப் பிரதிநிதிகளையும் பொம்மைவெளி மகப்பேற்று மருத்துவ நிலையத்தில் கண்டு கலந்துரையாடினார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்க 6 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். பான்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. தலைவராக திரு. எஸ். செல்வராஜாவும், செயலாளராக திரு ரீ. இராஜசிங்கமும், பொருளாளராக திரு. க. வேலாயுதமும் தெரிவாகினர். அத்துடன் ஐவர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. (25)

## பாணின் தரமும் குறைவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் பாண் விற்பனையில் பலத்த மோசடிகள் இடம்பெற்று வருவதாகப் பாவனையாளர்கள் புகார் செய்துள்ளனர்.

இப்பகுதிகளில் விற்பனை செய்யப்படும் பாண்கள் நிறை குறைவாக இருப்பது மட்டுமன்றி பாணிற்குள் வண்டுகள், புழுக்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (25)

## பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

கூட்டுறவு (தமிழ்) பரிசோதகர்களின் 12 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16.4 90 வியாழக்கிழமை காலை வவுனியா தேசிய கூட்டுறவு சபை மண்டபத்தில் சங்கத்தலைவர்

மைல் தூரத்தில் பெரியகொம்பன் யானை ஒன்று இறந்து கிடக்கக் காணப்படுகின்றது. இதன் தந்தத்துக்குள் முத்துக்கள் இருக்கலாமெனக் கருதப்பட்டாலும் அதற்குச் சமீபத்தில் போகமுடியாதபடி துர்நாற்றம் வீசுகிறதாம்.

## செென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்க்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப்பகுதி போக்குவரத்து சேவையை ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளதையிட்டு யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். இந்து சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணித் தலைவர் நகரப்பகுதி போக்குவரத்து கட்டுப்பாடுகளை அமுல் செய்வதில் உள்ள சிக்கல்கள் பற்றி மாநகர சபை ஆணையாளருக்கு எடுத்து கூறுகையிலே ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இம்மாத முடிவு வரைக்கும் மாணவர்களின் சேவையை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் பாணவர்களை வேண்டிக் கொண்டார். (லோ)

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

(தீவுப்பகுதி)

கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவனொருவன் அக்கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளான். இச்சம்பவம் வேலணை வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. (15)

கடந்த பத்து நாட்களாக மேற்கு இந்திய நகரமான

## வாழைநாரில் கைப்பணி செஞ்சிலுவைச் சங்க உதவி

(சுதுமலை)

.'எமது நாட்டிலுள்ளவர்கள் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி செய்வதில், மற்ற எந்த நாட்டவர்களுக்கும் சளைத்தவர்கள் அல்லர். அவர்கள் உற்பத்தியாக்கும் பொருட்களை மக்கள் பூரணமாகப் பாவித்து, இத்தொழிலைச் செய்வோரை உற்சாகப்படுத்துவது மட்டுமல்லாமல் பொருட்களை உற்பத்தி செய்வோரும் இதனை முழு அளவில் பாவிக்கவேண்டும்.''

இவ்வாறு அண்மையில் கொக்குவிலில் நடைபெற்ற வாழைநாரைக் கொண்டு செய்யப்பட்ட அலங்காரக் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சி வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் நல்லூர் ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. பெ. கனகசபாபதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசிகையில், கழிவுப் பொருளாகக் கருதப்பட்டு, குப்பையிலே வீசப்பட்ட வாழைநார் இன்று வீடுகளை அலங்கரிக்கும் பலவித அலங்காரப் பொருட்களாகக் காட்சி தருகின்றன.

இந்த உள்ளூர் உற்பத்திகள் மூலம் பல யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். யாராவது எமது உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தொழில்களை ஆரம்பித்து நடாத்த முன்வருவார்களேயானால் அவர்களுக்கு நல்லூர் ப.நோ. கூ. சங்கம் வேண்டிய நல்லுதவிகளை அளிக்கும் என்றார்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் இப் பயிற்சி வகுப்புகளில் சுமார் 20 பெண்கள் கலந்து கொள்கிறார்கள்.

இவர்களுக்கு ஒரு மாதப் பயிற்சிக் காலத்திற்கு ரூபா 400/- ஊக்குவிப்புப் பணமும் நற்சான்றிதழ்களும் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்படுகிறது. (19)

## மட்டக்களப்பில் கிராமம் தோறும் அன்னைக்கு நினைவஞ்சலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்வேறு பகுதிகளிலும் அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

நேற்று மாமாங்கம், கல்லடி ஆகிய இடங்களில் நினைவஞ்சலிக் கூட்டங்கள் நிகழ்ந்தன இக் கூட்டத்தில் பேசிய மட்டக்களப்பு அரசியற் பொறுப்பாளர் கரிகாலன் பேசுகையில், நாங்கள் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என ராஜீவ் காந்தியைக் கோரிய போது இராணுவ அழுத்தம் கொடுத்து எம்மைச் சரணடைய செய்ய முயற்சித்தார். ஆனால் கடைசியில் நிபந்தனையற்ற ரீதியில் வாபஸ் பெற்றனர் எனத் தெரிவித்தார். மேலும் எங்களிடம் இருந்து மக்களை அந்நியப்படுத்த வேண்டும் எனவும் தீவிரமாக இருந்தார். ஆயுத பலமும், அரசும் பெரிதாக இருந்தால் மட்டும் வெற்றி பெற முடியாது என்பது இதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

## அன்னை பூபதி நினைவாக மூதூரில் பல்வேறு நிகழ்ச்சிகள்

(மூதூர்)

அன்னை பூபதி நினைவாக இன்றும், நாளையும். சம்பூர் கலைவட்டத்தினர்பௌர்ணமி கலைவிழா நடத்தவுள்ளனர். இக் கலை விழாவிற்கு சம்பூர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூர் அவைத் தலைவர் சண்முகநாதன் தலைமை தாங்குவார்.

அதேவேளை எதிர்வரும் 11 ஆம் திகதி அன்னை பூபதியின் நினைவாக சம்பூர் விளையாட்டுமைதானம் சிரமதானம் மூலம் சீரமைக்கப்படவுள்ளது.

மேற்காமத்தில் 16 ஆம் திகதி அன்னை பூபதியின் தியாகத்தை வெளிக்கொண்டு வரக் கூடிய பல நிகழ்ச்சிகளை மேற்காமம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூர் அவையினர் நடத்தவுள்ளனர்.

நடந்த இந்து - முஸ்லிம் மோதலொன்றில் 26 பேர் காயமுற்றதுடன் இரு மரணங்களும் சம்பவித்துள்ளன. பறோடாவில் இச்சம்பவத்துக்குப் பிறகு ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரமாகவுள்ள மநிலமான குஜராத்தில் இந்துக்களும், முஸ்லிம்களும் கத்திகளையும், கற்களையும் கொண்டு சண்டையிட்ட பொலிஸ் காலவரையின்றி ஊர் அடங்குச் சட்டம் பிறப்பித்துள்ளது.

குஜராத்தின் பெரிய நகரமான அகமதாபாத்தில் நான்கு நாட்கள் நடந்த கலவரத்தினால் சென்ற வெள்ளிவரை 20 பேர் மரணமானார்கள். அகமதாபாத்தில் ஆரம்பித்த இனக்கலவரம் மற்ற நகரங்களுக்கும்பரவியதாகச் சொல்லப்படுகிறது.

## கிறீஸில் நடந்த தேர்தலில் யாருக்கும்பெரும்பான்மைஇல்லை

கடந்த பத்துமாதங்களில் நடந்த மூன்றாவது தேர்தலும் கிறீசில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பாண்மை கிடைக்காதெென கிறீஸ் அரசின் தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

சென்ற வருடம் ஜூன், நவம்பர் மாதங்களில் நடந்த தேர்தல்களும் இதே நிலையை அறிவித்திருந்ததாகும். கிறீஸ் கன்சர்வேட்டிவ் கட்சி அறுதிப் பெரும்பான்மையை கிறீஸ் பாராளுமன்றததில் பெறுவதற்கு இன்றும் ஒரு இடத்தை பெறவேண்டும் என அரசு தொலைக்காட்சி அறிவித்தது.

எந்தக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத இடத்து தொடர்ந்தும் ஒரு கலப்பு அரசையே ஸ்தாபிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

''விஞ்ஞான நாகரீக மாற்றங்களுக்கேற்ப பெண்களும் தமது அறிவு, ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந் நடவடிக்கைகளில் சமூகசேவை நிறுவனங்கள் முக்கிய பங்கெடுக்கவேண்டும். பெண்களுக்கான கல்வி வளர்ச்சி நடவடிக்கைகள், சுயதொழில் முயற்சிகள், குழந்தைகள் பராமரிப்பு, சுகாதார வழிமுறைகள், தலைமைத்துவப் பண்பை ஏற்படுத்தல் நடவடிக்கைகளில் சமூக சேவை நிறுவனங்கள் ஈடுபட வேண்டும். பெண்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் குடும்ப வருவாயைப் பெருக்கி குடும்ப நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்'' என்றார்.

விஞ்ஞானக்கல்வி ஆலோசகர் பிரம்மஸ்ரீ இர. சந்திரசேகர சர்மா, செல் சீதா வேலுப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

பேறாட் தையல் பயிற்சி ஆசிரியை செல்வி ஜி கமலேஸ்வரி நன்றியுரை கூறினார் (25)

## இரசாயன பசளைகளால் தீமைகள் ஏற்படுகின்றன

### விவசாயப் போதனாசிரியர் தகவல்

தீடிரெனஎடுத்ததற்கெல்லாம்இராசாயண பசளைவகைகளைப் பாவிப்பதை விடுத்து ஒன்றிணைந்த பயிரப்பாதுகாப்பினை மேற் கொள்வதாலும் சிறந்த முறையில் பயிர் சுகாதாரத்தைஅல்லது தோட்டசுகாதாரத்தை பேனுவதால் விவசாயிகள் அதிக லாபத்தை அடைய முடியும்

இவ்வறு வேலவணப் பகுதி கிருஷிகப் போதனாசிரியர்திரு ஏ ஐ இராசையா, அனலைதீவில் இடம் பெற்ற விவசாயக் கருத்தரங் கொன்றில் தெரிவித்தார்.

திரு இராசையா தொடர்ந்தும் உரையாற்றுகையில் பயிர் வகைகளுக்கு அதிக அளவில் இராசாயன பசளை வகைளை பாவிப்பதால் அவற்றினால் ஏற்படுகின்ற தீமைகள், பற்றி மிக விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இதே நேரத்தில் தீவுப் பகுதியில் பம்பாய் வெண்காயச் செய்கையினை விவசாயிகள் மேற்கொள்ளஉதவத்தயாராக இருப்பதாகவும் விவசாயிகளிடம் அவர் கூறினார்.

தேசிய கூட்டுறவு சபை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. பொ. அருள்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## அலுவலகம் திறக்கப்பட்டது

(சுதுமலை)

ஒரு கிராமத்து மக்களும் அந்த பகுதி கிராம சேவையாளரும் ஒரே குடும்ப அங்கத்தவர்கள் போல புரிந்துணர்வுடன் ஐக்கியப்பட்டு நடப்பீர்களேயானால் நிச்சயம் உங்கள் பிரச்சினைகள் கிராமசேவையாளர் மட்டத்திலேயே தீர்த்துவைக்கப்பட்டுவிடும்.

உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கோ அன்றி அரச அதிபர் செயலகத்திற்கோ இதனால் அலைந்து திரியும் காலமும் வீண் செலவீனங்களும் மிச்சப் படுத்தப் படும்

இவ்வாறு அண்மையில் திருநெல்வேலி வடமத்தி கிராம சேவையாளர் அலுவலகத்தை திறந்து வைத்துஉரையாற்றும் போதுநல்லூர்உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ மாகலிங்கம் குறிப்பிட்டார்.

திருநெல்வேலி வடமத்தி கிராமசேவையாளர் திரு என் பி பாக்கியராசா நன்றியுரை வழங்கினார். (19)

## புது வருடத்துக்கு உடுபுடவைகள்

(கரவெட்டி)

ஒர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெருந்தொகையான உணவுப் பொருட்கள், புடவைவகைகள் முதலியவற்றை கொள்வனவு செய்து தனது கிளைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அனைத்துக் கிளைகளும் இவ் விற்பனைக்காக எதிர்வரும் விடுமுறை தினங்களிலும் திறக்கப்படுமென மேற்படி சங்கத் தலைவர் திரு. கே. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (18)

# போராளிகள் கலந்து கொண்டு அம்பாறையில் மரதன் ஓட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் பயிற்சிமுகாமில் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் 600 போராளிகள் கலந்து கொண்ட மரதன் ஓட்டம் வியாழனன்று தாண்டியடி என்னுமிடத்தில் வைத்து ஆரம்பமானது.

காலை6.22க்குஆரம்பமான இந்த மரதன் ஓட்டத்தில் முதலாவதாக வந்த குணதாசன் என்பவர் 8.00 மணிக்கு அக்கரைப்பற்று வந்தடைந்தார்.

போராளிகள் 42 கிலோ மீற்றர் தூரத்தையும் ஓடிக் கொண்டிருக்கும் போது வழி நெடுகிலும் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், வயோதிபர்கள் கூட குடங்களில் தண்ணீர் வைத்திருந்து உணர்ச்சி பொங்கிய நிலையில் போராளிகளுக்கு ஊற்றி குளிரூட்டினர்.

அக்கரைப்பற்றை வந்தடைவதற்கு நான்கு மைல் தூரத்திற்கு அப்பால் வீதியில் நின்றிருந்த வயோதிபர் ஒருவரும் உணர்ச்சி ததும்ப போராளிகளுடன் ஓடி அக்கரைப்பற்றை வந்தடைந்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அக்கரைப்பற்றில் போராளிகளின் பெற்றோர், உற்றார் உறவினர்கள் போராளிகளைக் காண ஆயிரக் கணக்கில் கூடி நின்று கைதட்டி வரவேற்றனர்.

மரதன் ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வாகனப் போக்குவரத்து எல்லாம் நிறுத்தப் பட்டிருந்தது. அக்கரைப்பற்று நகரின் ஒரு புறத்தால் வந்து கொண்டிருந்த இலங்கை இராணுவ கவச வாகனம் புலிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. அவர்கள் வாகனத்தைச் செலுத்த முயன்றும், போராளிகள் வீதியை கயிறு கட்டி மறித்தனர். மரதன் ஓட்டம் முடிவடைந்த பின்னரே இராணுவ ட்ரக் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இப்போட்டியில் இரண்டாவது இடத்தை யோகரெத்தினம் என்னும் போராளியும், மூன்றாவது இடத்தை குலேந்திரன் என்னும் போராளியும் எடுத்தனா.

இவ்வைபவத்துக்கு மட்டு அம்பாறை மாவட்டங்களின் புலிகள் தளபதி திரு. கருணா, அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. ராம், அம்பாறை மாவட்ட மக்கள் முன்னணி பொறுப்பாளர் திரு. காஸ்ரோ ஆகியோருடன் மற்றும் முக்கிய புலி உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

இதில் கலந்து கொண்டு மீண்டும் முகாமுக்குச் சென்ற போராளிகளுடன் அவர்களின் பெற்றோர்களும் அழைக்கப்பட்டு, அங்கு மதியபோசனமும் வழங்கப்பட்டதுடன், போராளிகளுடன் அவர்கள் அளவளாவியும் வந்தனர் (48)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன்பலி

(பருத்தித்துறை)

பஸ்சால் இறங்கி வீதியைக் கடக்க முயன்ற சிறுவன் ஒருவனை மோட்டார் சைக்கிள் மோதியதால் சிறுவன் பலியானார்.

இப்பரிதாபகரமான சம்பவம் எழுதுமட்டுவாளில் இடம் பெற்றது. எழுதுமட்டுவாள் தெற்கைச் சேர்ந்த வேல் முருகு செந்தூரன் (வயது 6) என்ற சிறுவனே இவ்வாறு பலியானவர் ஆவர்

விபத்திற்குள்ளான இச்சிறுவன் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்ட போது அவர் வைத்தியசாலையில் மரணமானார். (25)

# வடக்கில் இருந்து ஜனாதிபதிக்கு சமாதானச்செய்தி

(கொழும்பு)

ஜனாதிபதியும் பிரதம சாரணருமான ஆர். பிரேமதாஸாவிடம் கையளிப்பதற்காக சமாதானச் செய்தியொன்றை எடுத்துக்கொண்டு வடபகுதியிலிருந்து சாரணர் குழுவொன்று இன்று காலை புறப்படுகின்றது. பளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சாரணர் குழுத்தலைவர் என். புவனேந்திரன் தலைமையில் எட்டுச்சாரணர்கள் அங்கம் வகிக்கும் இக்குழுவினர், புத்தாண்டுத் தினத்தன்று தமது செய்தி பிரதம ஆணையாளர் நளின் சில்வாவினூடாக மேன்மைதங்கிய ஜனாதிபதியிடம் கையளிப்பார்கள். இந்தச்செயலின் மூலம் அவர்களுக்குத் 'தமிழர் ஸ்ரார் விருதும்' கிடைக்கலாம். வடபகுதிச் சாரணர்களை இன்று காலை 6.30 மணிக்கு பளை மகாவித்தியாலயத்தில் வைத்து யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர், உதவி மாவட்டஆணையாளர், பதில் உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி கல்வி திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் வழி அனுப்பி வைப்பார்கள்,

# மூதூரில் மாபெரும் ஊர்வலம்

(மூதூர்)

இந்திய இராணுவம் எம் மண்ணை விட்டு வெளியேறியதைக் கொண்டாடும் முகமாக 18ஆம் திகதி மூதூரில் மாமெரும் ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது, மூதூர் முத்தவெளி மைதானத்தில் இருந்து புறப்படும் இவ்வூர்வலம் ஐந்தாம் கட்டை ஊடாகச் சென்று அல்வாய்-கந்தளாய் வீதியூடாக சேருவலை தோப்பூர் வழியாக கூனித்தீவு சென்று சாம்பூர் ஊடாக மூதூர் முத்தவெளியைச் சென்றடையும்.

அடுத்த நாள் 19ஆம் திகதி இது தொடர்பாக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந் நிகழ்ச்சிகளில் சகல தமிழ் பேசும் மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிகின்றது.

# விளையாட்டுப்போட்டி கோத்தணி முறைக்கு எதிரானது

## கல்வியதிகாரிகளிடம் புகார்

(கொழும்புத்துறை)

கைதடி கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி கொத்தணி அமைப்பு முறைக்கு முற்றிலும் முரணானது எனச் சுட்டிக்காட்டும் ஆட்சேபக் கடிதம் ஒன்றைக் கைதடிக் கொத்தணிப்பாடசாலையில் கடமை புரியும் ஆறு ஆசிரியர்கள் கையொப்பமிட்டுக் கோட்டக் கல்வி அதிகாரி திரு.சி. தியாகராசாவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக் கல்வி அதிகாரியிடம் மைதானத்தில் வைத்துப் பிரஸ்தாப ஆட்சேபக் கடிதம் கையுளிக்கப்பட்டது.

"நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டி கொத்தணிப்பாடசாலைகளின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியாக இல்லாமல்பாடசாலைகளுக்கு இடையேயான நேரடி விளையாட்டுப்போட்டியாகவே நடைபெறுகின்றது. இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டியானால் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு இல்

# ஆலய நெற்காணிகள் குத்தகைக்கு விடப்பட்டன

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலய காலபோக நெற்காணிகள் மேற்படி ஆலய முன்றலில் ஏலத்தில் குத்தகைக்கு ஆலய நிருவாக சபையினரால் கொடுக்கப்பட்டது.

கடந்த காலத்தை போல் அல்லாது, இவ் வருடம் சிறுபோகம் செய்வதற்கு காணி அற்றோருக்கு 3 ஏக்கர் வீதம் பிரித்து குத்தகைக்கு கொடுபட்டது. கடந்த காலங்களில் மூன்று, நான்கு கண்டங்கள் சேர்ந்த காணிகளாக, குத்தகைக்கு கொடுபட்டது.

இதனால் குறைந்தளவு காணியில் பயிர் செய்ய வசதி உடைய ஏழைகள் கூடிய வயல்களை, கூடிய ஆயம் கொடுத்து செய்கை பண்ண விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (29)

# இவர்களுக்கும் சம்பள அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட இருநூறு ரூபா சம்பள அதிகரிப்பு யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கட்கும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து இச்சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. (24)


## குகன் ஸ்ருடியோ

(மீண்டும் பழைய இடத்தில்)

இம் மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் குகன் ஸ்ருடியோ பழையஇடத்தில் (துறைமுகத்திற்கு அண்மையில்) இயங்குவதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

பிரதான வீதி,
பருத்தித்துறை.

(R.96)



## Data Processing and Computer Programing in BASIC LANGUAGES

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**9 April 1990**

| | | |
|---|---|---|
| Basic Languages | - | 9-00 a. m. |
| Lotus 1, 2, 3 | - | 10-30 a. m. |
| Word Processing | - | 1-30 p. m. |

Contact

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD,
**JAFFNA.**

(B/599)



அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலிகள்



உங்களுக்குத் தேவையான
**எவர்சில்வர்**
பாத்திர வகைகளுடன்
**அழகுசாதனப் பொருட்கள்**
அன்பளிப்புக்கள்
**சிறுவர் சைக்கிள்**
வகைகள்
இறக்குமதியிலான



# ஈழநாதம்

இதனால் குறைந்தளவு காணியில் பயிர் செய்ய வசதி உடைய ஏழைகள் கூடிய வயல்களை, கூடிய ஆயம் கொடுத்து செய்கை பண்ண முடியாத நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டே வந்தனர்.

அத்தோடு வசதி உடையவர்களும் கூடிய காணியில் பயிர் செய்பவர்களுமே செய்கை பண்ணி வந்தனர். இதுபற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலய நிருவாக சபையிடம் மேற்கொண்ட நடவடிக்கையை தொடர்ந்தே காணி அற்றோருக்கு காணிகள் செய்கைக்கு வழங்கப்பட்டது.

இந்த சிறப்பான நடவடிக்கையை தொடர்ந்து வந்தாறுமூலை வாழ் மக்கள் தமிழீழ

துள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து இச்சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. (24)

## நபீபியாவை இலங்கை வாழ்த்தவில்லை

(கொழும்பு)

சுதந்திர நாடாக நபீபியா சமீபத்தில் பிரகடனப் படுத்தப்பட்டபோது கொழும்பில் எமது வெளி விவகார அமைச்சு ஒரு வாழ்த்துச் செய்தியைக் கூட அனுப்பி வைக்கவில்லையாம். மற்ற நாடுகளின் தலைவர்கள் பலர் தாமே நேரில் நபீபியா சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


ஈழநாதம்

மக்கள் தினசரியின்

மானிப்பாயில் எமது விநியோகஸ்தர்

KT. நாயகபாலன்

நாயகபாலன் ஸ்ரோர்ஸ்

மானிப்பாய்.


பெறுகின்றது. இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டியானால் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு இல்லங்களிலிருந்தும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரு வீரர்களை எடுத்துப் போட்டி நடாத்த வேண்டும் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இவ்விளையாட்டுப் போட்டிக்கு ஒரு நிகழ்ச்சிக்கு பாடசாலையில் இருந்து இரண்டு போட்டியாளர்களை எடுத்தே நடத்துகிறார்கள். இதை உற்றுநோக்கும் போது இது பாடசாலைகளுக்கு இடையிலான நேரடிப் போட்டியாகவே உள்ளது''


வகைகள்

இறக்குமதியிலான

கைக்கடிகாரங்கள்

அனைத்துக்கும் நாடுங்கள்

சரவணாஸ் 102, கண்டி வீதி, சாவகச்சேரி.

(B/521)


போட்டி முடிவில் பரிசில்கள் வழங்கும் போது வெற்றி வீரரை அழைக்கும் போது வீரரின் இல்லத்தைக் குறிப்பிடாமல் பாடசாலைகளின் பெயரைச் சொல்லி அழைத்ததும் போட்டி அமைப்பு முறைகளுக்கு முரணானது எனவும் பல ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் (24


அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை

ஈழநாதம் மூலமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்

சூரியா தீப்பெட்டிகள்,

பொபி இன்டஸ்றீ ஊதுபத்திவகைகள்

(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)

லக்கிலன் பிஸ்கட்

(மன்னார் மாவட்ட விநியோகஸ்தர்கள்)

கரன் றேடர்ஸ் - கைதடி.

(B-726)

சிந்தனைக்கு

முயற்சி திருவினையாக்கும்

- முதுமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 10 - 04 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2202

## முடியாதது ஒன்றுண்டா?

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பலவண்மைகள் செய்வோம்"

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னர் பாரதியார் பாடிய பாடல்களில் சில வரிகள் இவை.

ஆயுதம் செய்வோம்; காகிதம் செய்வோம்; ஆலைகள் வைப்போம் என்று பின்னர் செய்ய வேண்டியவை பற்றித்தான் பாரதியார் அன்று பாடினார்.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் பாரதியார் 'செய்வோம்' என்று சொன்னவைகளில் பலவற்றைச் செய்துகொண்டிருக்கிறோம்.

கடந்த சில வருடங்களில் உள்நாட்டுப் படை எடுப்பினாலும் அந்நியப் படையினாலும் நமது ஆலைகள் தொழிற்சாலைகள் உற்பத்தியிலீடுபடமுடியாமல் போனதுடன் சேதமடைந்தும் போயின.

இது மட்டுமல்ல வடக்கிலும் கிழக்கிலும் சீமெந்து உற்பத்தி ஆலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனைக் காகித ஆலை ஆகியவை சிறந்த முறையில் இயங்கி உற்பத்தியும் அதிகரித்து வந்தது கண்டு தென்னிலங்கையில் ஆட்சிபீடத்திலிருந்தவர்கள் மட்டுமல்ல ஆட்சிபீடத்திலமர்வதற்கு ஆசைகொண்டு இருந்தவர்களும் பொறாமை கொண்டனர்.

தமிழ் மக்கள் தனிநாடு பெற்றுவிட்டால் அவர்களுக்கு இந்த கனரகத் தொழிற்சாலைகள் கைகொடுத்துவிடும் என்று கருதி இந்த ஆலைகளின் விஸ்தரிப்புக்கு இடையூறு செய்யத் தொடங்கினர்.

சீமெந்து ஆலை விஸ்தரிப்பை நிறுத்தி புத்தளத்திலும் காலியிலும் புதிய ஆலைகள் திறக்கப்பட்டன.

வாழைச்சேனைக் காகித ஆலை விஸ்தரிப்பையும்

# நிபந்தனை அற்ற பேச்சுக்கு ராஜீவ் மறுப்பு

# இலங்கை அரசின் நிபந்தனையற்ற அழைப்பு

★ அமைதி உடன்படிக்கையில் குறிப்பிட்டதற்கு மாறாக இந்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கடற்பகுதியில் வைத்து 17 விடுதலைப் புலி இயக்க வீரர்களைக் கைது செய்த இலங்கை அரசு, அவர்களை விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது ராஜீவ் அரசிடம் அதைச் சுட்டிக்காட்டிய விடுதலைப் புலிகள், "அமைதி உடன்படிக்கையை மதித்துத்தான் 17 வீரர்களும் இலங்கைப் படையினரை எதிர்த்துத் தாக்காமல் சிங்களப் படையிடம் கைதானார்கள், அமைதி உடன்படிக்கையின் படி அவர்களைக் கைது செய்ய முடியாது. இலங்கைப் படை அவர்களிடம் ஏதாவது விசாரணை நடத்துவதானால் இந்திய அதிகாரிகளின் பாதுகாப்பில் தமிழீழப் பகுதியில் வைத்து நடத்தலாம். ஆனால் அவர்களை எக்காரணம் கொண்டும் கொழும்புக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது. சிங்களப்படை அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு இந்தியப்படை அனுமதித்தால் 17 வீரர்களும் சயனைட் அருந்தி உயிரை மாய்த்துக் கொள்வார்கள்' என்று உறுதியாகக் கூறினர். அவ்வேளையில், '17 வீரர்களையும் கொழும்புக்குக் கொண்டு செல்ல தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும், மேலிடத்தில் பேசி அவர்களை விடுவிக்க ஆவன செய்வதாகவும் இந்திய அதிகாரிகள் விடுதலைப் புலிகளிடம் உறுதியளித்திருந்தனர். ஆனால் அந்த 17 பேரின் உயிரையும் பணயம் வைத்து விடுதலைப்புலிகளைப் பணிய வைக்கலாம் என்ற நயவஞ்சக எண்ணத்துடன் ராஜீவ்காந்தி அந்த 17 வீரர்களையும் கொழும்புக்குக் கொண்டு செல்வவதற்கு சிங்களப் படையை அனுமதிக்கும்படி இந்தியப் படைக்கு உத்தரவிட்டார். ராஜீவ் காந்தியின்

டிருந்த நல்லெண்ணத்தை பேரிலும், மனிதாபிமானத்தின் பேரிலும் கடுமையாகக் காயமடைந்திருந்த இரண்டு இந்தியப் படையினரை உடனடியாகவிடுவித்த விடுதலைப் புலிகள்மீது 'கைது செய்த இந்தியப் படையினரை விடுதலைப் புலிகள் உயிருடன் டயர்களைப் போட்டுக் கொளுத்தினார்கள்' என்று பழி சுமத்தி பொய்ப் பிரச்சாரத்திலிறங்கியது ராஜீவ் அரசு.

### கைது செய்யப்பட்ட இந்தியச் சிப்பாய்கள்

கைது செய்த இந்தியவீரர்களைப்புலிகள்படுகொலைசெய்தார்கள் என்ற அவச்சொல்லைப் பொய்யாக்கும் வகையில் தாம் பிடித்து வைத்திருந்த மேலும் 18 இந்தியப் படையினரை - கைதிகள் பரிமாற்றம் போன்ற தமது லாப நோக்கத்துக்கான எதுவித முன்நிபந்தனைகளையும் போடாது (கைதிகளை விடுவிக்கும் வேளையில் தமது பாதுகாப்புக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான சில நிபந்தனைகளை மட்டும் விதித்து) விடுதலைப் புலிகள் விடுவிக்க முன்வந்த போது, 'செயற்படுத்த முடியாத முன்நிபந்தனைகளைப் புலிகள் விதிக்கிறார்கள்' என்று பொய்ப் பிரச்சாரம் செய்ததுடன், கைதிகள் விடுவிக்கப்படுவதைப் பார்வையிட அழைத்தச் சென்ற பத்திரிகையாளர்களையும் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட இந்திய வீரர்களிடம் பேட்டி காணவோ, அவர்களிடம் உண்மை நிலையைக் கேட்டறியவோ ராஜீவின் அதிகாரிகள் அனுமதிக்காததுடன் 'கைது செய்யப்பட்ட இந்தியப் படையினரை விடுதலைப் புலிகள் சித்திரவதை செய்தார்கள், கொடுமைப்படுத்தினார்கள்' என்று பொய்ப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டனர்.

★ இந்தியாவின் மீதும் இந்

வைக்கப்பட்டிருந்த சமூக விரோதிகளையெல்லாம் விடுவித்து அவர்களுக்கு வேண்டிய பணம், ஆயுதப் பயிற்சி ஆயுதம் என்பவற்றைத் தாராளமாகஅள்ளிவழங்கி, அவர்களை விடுதலை இயக்கமாக அங்கீகரித்து விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தூண்டிவிட்டது ராஜீவ் அரசு.

★ இந்திய மண்ணில் சட்டம் ஒழுங்கை மதித்து கண்ணியம், கட்டுப்பாட்டோடு இயங்கி தமிழக காவல்துறை அதிகாரிகளாலேயே பாராட்டப்பட்ட விடுதலைப் புலி இயக்கத்தினரை, அவர்கள் ராஜீவ் காந்தியின் அடிமைகள் போன்று செயற்பட மறுத்த ஒரே காரணத்துக்காக 'சமூக விரோதிகள்', இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலைவைபப வர்கள்', சட்டவிரோதமாக, திருட்டுத்தனமாக நாட்டுக்குள் நுழைந்தவர்கள்', 'சதிகாரர்கள்' என்றெல்லாம் குற்றம் சுமத்தி அவர்களைக் கைது செய்து விசாரணையற்ற கொடிய பாதுகாப்புச் சட்டத்தி கீழ் சிறையில் அடைத்துக் கொடுமைபடுத்தியது ராஜீவ் அரசு.

### நயவஞ்சகமான கொலை

ராஜீவ் காந்தியினதும், அதிகாரிகளினதும் அடக்குமுறை, அவமானங்களையெல்லாம் சகித்துக்கொண்டு விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ராஜீவ் அரசோடு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வந்த வேளையில் விடுதலைப் புலிகளின் லெப்டினன்ட் கேணல் ஜானியை பேச்சுவார்த்தைக்கென விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க அழைத்துச் செல்வதாகக்கூறி சென்னையிலிருந்து விமானப்படை விமானத்தின் மூலம் வவுனியாவுக்கு அழைத்துச் சென்று நடுக்காட்டில் வைத்து நயவஞ்சகமாகச் சுட்டுக் கொன்று யுத்த தர்மத்துக்கே இழுக்கை, களங்கத்தை ஏற்படுத்தியது ராஜீவின் படை.

★ அமைதிப் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் ராஜீவ் அரசால் முற்றாக அடைக்கப்பட்ட நிலையில் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைக்கு அழைத்த இலங்கை அரசின் அழைப்பை ஏற்று விடுதலைப் புலிகள் இலங்கை அரசோடு பேச்சுவார்த்தையில் இறங்கியிருக்கின்றனர்.

(நன்றி தமிழீழம்)

**கண்ணி வெடிகளை அகற்றி, எமது மக்களைச் சமாதானப் படுத்தி, சாலை மறியல்களையும் தளர்த்தி வைத்து இந்தியப்படை நகருக்குள் வர வழி அமைத்துக் கொடுத்த விடுதலைப் புலிகளைத் திட்டமிட்டு அழிக்கும் முயற்சியில் இறங்கிய ராஜீவ் அரசு.**

## கூட்டுத்தாபன ஊழியர்

1953 ஆம் ஆண்டு ஜூலை இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு, வேலை இழந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவமதன அரசு தீர்

மக்கள் மலர்

மானித்தது. இரண்டு வருடத்துக்கு மேலாகியும் பாதிக்கப்பட்டவர்களில் 80 சதவீதமானவர்களுக்கு இன்னமும் வேலை வழங்கப்படவில்லை என்பதனை பாதிக்கப்பட்ட ஊழியர்கள் இணைப்புக்குழு ஜனாதிபதிக்குக் கடிதங்கள் மூலம் பல தடவை சுட்டிக் காட்டியுள்ளது.

இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவது தொடர்பாக அரசாங்கத்தினால் 25-04-88 இல் வெயிடப்பட்ட சுற்றுநிருபத்தின் அடிப்படையில், 500 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நிவாரணம் கோரி விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இருவருடத்திற்கு மேலாகியும் 400 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மீண்டும் வேலை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் இணைப்புக்குழு இது தொர்டர்பாக உரிய திணைக்கள அதிகாரிகளையும், கூட்டுத்தாபனத் தலைவர்களையும் கேட்டும் எதுவித நடவடிக்கைகைகளும் எடுக்கப்படவில்லை.

K. மாணிக்கவாசகம்
மானிப்பாய்.

## ஊர்சுற்றி

எழுதுவது

நண்பர் புரட்சிக் கவிஞர் புதுவை இரத்தினதுரை இரண்டு தினங்களுக்கு முன் வந்தார். அவர் முகத்தில் ஆத்திரமும் கவலையும் கலந்து காணப்பட்டது.

என்ன சமாச்சாரம்? 'என்று நான் வார்த்தையை முடிப்பதற்கு முன்னரே இன்னமும் கொஞ்சம்கூடச் சுரணையற்றவர்கள் நம்மத்தியிலிருக்கிறார்களே என்று நினைக்கும் போது என்று முஷ்டியை நிமித்தினார்.

எனக்கே என்மீது சந்தேகம் வந்துவிட்டது.

என்னைத்தான் சொல்கிறாரோ எங்கே என் மூஞ்சியில்தான் முஷ்டி வந்து நிற்கப்போகிறதோ என்ற அச்சம் வேறு. என்றாலும் துணிச்சலை வரவழைத்து என்னய்யா சொல்கிறீர், யாரைச் சொல்கிறீர்?" என்று கேட்டேன்.

கொஞ்சம் முதல் ஓரிடத்துக்கு ஒருவரைச் சந்திக்கப் போயிருந்தேன். அங்கே போனதும் ராஜீவ் காந்தியின் படம் பெரிய அளவில் கண்ணாடி பிறேம் போட்டு சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. "அதைப் பார்த்ததும் எனக்கு ஆத்திரப் பொத்துக் கொண்டு வந்தது. இப்படியும் சுரணை கெட்டவர்கள் இன்னமும் நம்மத்தியிலிருக்கிறார்களா? என்று என்னையே கேட்டுக் கொண்டேன்" என்றார் புதுவை. அந்த நேரம் பயத்தில் படத்தை மாட்டியிருக்கலாம் என்று நான் அவரைச் சமாதானம் செய்ய முயன்றேன்

பயம் இன்னமுமா இருக்க வேணும். படைகள் போனதுமே படத்தைத் தூக்கி வீசியிருக்கலாம் அல்லது வேறு படத்தைப் போட்டு மாட்டியிருக்கலாமே! இதெல்லாம் பயம் என்று சொல்ல முடியாது; பக்தி விசுவாசம் என்று தான் சொல்ல வேண்டும் என்று பொரிந்து தள்ளினார் புதுவை!

வாழைச்சேனைக் காகித ஆலை விஸ்தரிப்பையும் உற்பத்தியையும் குறைத்து எம்பிலிப்பிட்டியாவில் புதிய ஆலை நிறுவப்பட்டது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இயங்காமல் செய்யப்பட்டது.

இதன் விளைவாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலுள்ள யந்திர சாதனங்கள் கவனிப்பாரற்றுத் துருப்பிடித்துள்ளன.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடிவிடுவது பற்றித்தான் கடந்த சில வருடங்களாகப் பேசப்பட்டு வருகிறதேயன்றித் தொடர்ந்து அதை இயங்க வைப்பது பற்றித் தென்னிலங்கையில் குரல் ஒலிக்கவில்லை.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் இயங்க வேண்டும்; நமக்குத் தேவையான இரசாயனப் பொருள்களை மட்டுமல்ல ஏற்றுமதி செய்யக்கூடிய பல பொருள்களையும் இங்கு உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலம் அந்நிய செலாவணியையும் நாம் சம்பாதிக்க முடியும்.

இரசாயனத் தொழிற்சாலை மட்டுமல்ல இன்னும் இங்கு கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு புதிய புதிய பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளை நாம் புதிதாக நிறுவுவதற்கும் முன்வர வேண்டும்.

கடந்த சில வருடங்களில் நடந்த போரில் பல தொழிற்சாலைகள் சேதமடைந்து உற்பத்தியை இழந்துவிட்டன.

இப்பொழுதே நாம் பருத்தி உற்பத்தியில் ஈடுபடவும் கைத்தறி மின்தறி ஆலைகளை அமைக்கவும் முன்வர வேண்டும்.

இதன் மூலம் வேலை வாய்ப்பும் நமது தேவையும் நிறைவேற்றப்படும்.

நமக்கு மூளை பலமும் ஆட்பலமும் நிறைய இருக்கிறது. பணப் பலம்தான் வேண்டும்.

மக்கள் நினைத்தால் நடவாதது ஒன்று உண்டா?

இந்தியப் படைக்கு உத்தர விட்டார். ராஜீவ் காந்தியின் இந்தப் பழிவாங்கும் நயவஞ்சகப் போக்கினால்விடுதலைப் புலிகள் 12 தளபதிகளை அநியாயமாக இழந்தார்கள்.

**பத்திரிகை அலுவலகங்கள் எரிப்பு**

★ ஆரம்பத்தில் தமிழீழத்துக்குச் சென்ற இந்தியப்படை தமிழீழ மக்களின் சாலை மறியல், சிங்களப்படைக்கு எதிராக விடுதலைப் புலிகள் தெருவெங்கும் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடிகள் இவற்றினால் நகருக்குள் நுழையமுடியாமல் திண்டாடியபோது பல ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகளை அகற்றி, பொதுமக்களைச் சமாதானப்படுத்தி சாலை மறியல்களையும் தளர்த்த வைத்து இந்தியப்படை நகருக்குள் செல்ல வழி அமைத்துக் கொடுத்த விடுதலைப் புலிகளை-ஆயுத ஒப்படைப்பு என்ற பெயரில் அவர்களின் ஆயுதங்களைக் கீழே போட வைத்துவிட்டு-திட்டமிட்டு அழிக்கும் முயற்சியில் இறங்கியது ராஜீவ் அரசு.

யுத்த காலங்களில்கூட எங்கேயும் நடைபெறாத வகையில் திட்டமிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த செய்திப் பத்திரிகை அலுவலங்களையும் விடுதலைப் புலிகள் நடத்தி வந்த 'நிதர்சனம் தொலைக்காட்சி, மற்றும் வானொலி நிலையங்களையும் இரவோடு இரவாகத் திடீரென்று குண்டு வீசித் தகர்த்துவிட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை உள்ளே அனுமதிக்காது விடுதலைப் புலிகள்மீது கண்மூடித்தனமான தாக்குதலை ராஜீவின் இராணுவம் மேற்கொண்டது.

★ கடுமையான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும்கூட தம்மிடம் பிடிபட்ட இந்தியப் படையினர் சாகக்கூடாது என்று இந்தியாவின்மீது கொண்டனர்.

★ இந்தியாவின் மீதும் இந்திய மக்களின் மீதும் தாம் கொண்டிருந்த ஆழமான மதிப்பு, நட்பு இவற்றின் காரணமாக ராஜீவ் அரசினதும், அதிகாரிகளினதும் கீழ்த்தரமான பழிவாங்கும் நடவடிக்கைகளையெல்லாம் பொருட்படுத்தாத விடுதலைப் புலிகள் யுத்தத்தில் அவ்வப்போது தம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட இந்தியப்படை வீரர்களைத் தொடர்ந்து விடுதலை செய்து வந்திருக்கின்றனர்.

ஆனால் ராஜீவ் அரசின் படையினரோ தமிழீழத்தில் விடுதலைப் புலிகளை மட்டுமன்றி புலிகளின் ஆதரவாளர்களான பொதுமக்களைக்கூட ஆயிரக்கணக்கில் பிடித்து இராணுவ முகாம்களில் அடைத்துவைத்து சித்திரைவதை செய்ததுடன் அவர்களில் பலரை முகாம்களிலேயே அடித்துக் கொன்றிருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, ராஜீவ் காந்தி ஒவ்வொரு தடவை தமிழகத்துக்கு வருகை தந்த வேளைகளிலும் அவரது பாதுகாப்புக்கு என்று காரணம் கூறி-தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை மதித்து கடைப்பிடித்து வந்த-விடுதலைப் புலி இயக்க வீரர்களையெல்லாம் சமூக விரோதிகள் என்ற பெயரில் பிடித்து சிறைகளில் அடைத்து அவமானப்படுத்தி வந்தது ராஜீவ் அரசு.

★ அதே வேளை, தனக்குச் சலாம் போட்டுக் கொண்டு தமிழகத்தில் சமூக விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த ஈழகத்தின் சில குழுக்களுக்கு முழுமையான பாதுகாப்பும் உதவியும் வழங்கி வந்தது ராஜீவ் அரசு. தமிழகத்தில் சூளைமேடு படுகொலை, பேராவீரணி படுகொலை சம்பவங்களில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில்

காட்டியுள்ளது.

மானிப்பாய்.

# மானிப்பாய் மருதடி ஆலயத்தில் இலங்கை வங்கி விசேட கருமம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் உள்ள இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் விசேட கருமபீடத்தில் குழந்தைகளுக்கான சேமிப்புக் கணக்கு இருநூறுக்கு மேல் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

குழந்தைகளுக்கான கணக்கு ஆரம்பிக்க தற்போது பிறப்புச்சாட்சி பத்திரம் இல்லாதவர்களும் இதில் கணக்குகளை தொடங்கலாம் என இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் திரு சீ.என். நவரட்ணராசா தெரிவித்துள்ளார்.

ஆனால் மூன்றுமாதகாலத்தில் பிள்ளைகளின் யிறப்புச் சாட்சிப் பத்திரங்களை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

இன்று 10 ஆம் திகதி இ[illegible]ளப்பாறிய அதிபர் திரு சீ சுப்பிரமணியமும் 11 ஆம் திகதி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு.கே சிவசம்புவும், 12 ஆம் திகதி சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலி[illegible]கமும் இந்த விசேட கருமபீடத்தில் கணக்குகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

# புதிய நியமனம் இடமாற்றம் நிறுத்துமாறு உத்தரவு

(பருத்தித்துறை)

வடக்குக்கிழக்கு மாகாணசபைக்குட்பட்ட மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளில் புதியநியமனங்கள் இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் செய்யப்படுவது மறு அறிவித்தல் வழங்கப்படும்வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகணசபை ஆளுனர் நளின் செனவிரத்தின அறிவித்துள்ளார்

மாகாணசபை ஆளுநரின் இவ் உத்தரவை வடக்குக் கிழக்கு மாகாணசபை உள்ளுராட்சிச் சேவைத்திணைக்களப் பணிப்பாளர். திரு.பீ ஜெகநாதன் வடக்குக் கிழக்கு மாகாணசபைக்குட்பட்ட சகல மாநகர சபைகள், நகர சபைகள் பிரதேசசபைகளுக்கும் அறிவித்துள்ளார். (25)

## அம்பாறையில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசுநாயனார் குருகுலத்தினர் தம்பிலுவில் குருகுல மண்டபத்தில் அப்பர் குருபூஜையை வெகு சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

இக்குருபூஜையில் பல சைவப் பெரியார்கள் கலந்து கொள்ளவிருப்பதாக குருகுல ஸ்தாபகர் திரு சு. தம்பையா (அதிபர்) தெரிவித்தார். (48)

பொரிந்து தள்ளினார் புதுவை!

நல்லவேளை அந்த இடத்திலேயே அவர் அறம் பாடவில்லை!

★ ★ ★

சிறிமா அம்மையாரின் இளையமகள் சந்திரிகா குமாரணதுங்கா பிரிட்டனில் சிலகாலம் அஞ்ஞாதவாசம் செய்த பின் நாடு திரும்பியிருக்கிறார். கொழும்பில் எதிர்க்கட்சிகள் கூட்டாக நடத்திய கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பேசியிருக்கிறார். அம்மா சிறிமா கூட்டத்துக்குத் தலைமை வகிக்க மகள் சந்திரிகா கூட்டத்தில் உரையாற்றியிருக்கிறார்.

அம்மாவுக்கும் மகஅநுராவுக்கும் இப்பொழுது டூ!

இடைக்கிடை இப்படி செல்லக் கோபம் வருவதுண்டு. சந்திரிகாவை அரசியலுக்குள் மீண்டும் இழுத்து தமது இடத்தை அவளுக்குக் கொடுப்பதற்கு அம்மா முயற்சி செய்வதாக ஆநுராவுக்கு சந்தேகம்!

1975 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். யாழ் வளாகத்தைத் தொடக்கி வைக்க சிறிமா அம்மையார் யாழ்ப்பாணம் வந்திருந்தார். வளாகத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அம்மையார் வந்து அமர்ந்திருந்தார் எதிரே பிரமுகர்கள் வரிசையில் அம்மையாரின் மூத்த மகள் சுனித்திராவும் கணவன் குமார் ரூபசிங்காவும் (இன்று இவர் இல்லை ஒருபுறத்திலும் மற்றொரு புறத்தில் சிறிது தூரத்தில் அநுராபண்டார நாயக்காவும் அமர்ந்திருந்தனர் இரு பகுதியினரும் நெருங்கி வரவே இல்லை!

இதுவே அவர்கள் குடும்பச் சண்டை!

ஈழநாதம்

## பாணைக் கூடிய விலையில் விற்ற வியாபாரிக்கு 5000 ரூபா அபராதம்

(கொழும்பு)
450 கிராம் நிறையுள்ள பாணை ஏழு ரூபாவுக்கு விற்பனை செய்த பாண் வியாபாரி ஒருவருக்கு நுவரெலியா நீதிவான் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இந்த வியாபாரிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

## 2500 ஆசிரிய பயிலுநருக்கான திசைகோள் உறுத்தற் பயிற்சி

புதிய பயிலுநர் ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் திசைக்கோள் உறுத்தற் பயிற்சி இம்மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு யா/ சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், உடுவில் உ.அ அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் மு. ப. 8 30 மணி தொடக்கம் பி. ப. 3 30 வரை நடைபெறவுள்ளது

பயிற்சியில் உரிய பிரிவுகளை சேர்ந்த சகல பயிலுநர் ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென்றும், மதிய போசனத்திற்குரிய ஒழுங்குகளைப் பயிற்சியாளர்களே செய்துகொள்ள வேண்டும் என்று தெரிகிறது. சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் பயிற்சிக்கு மருதனாமடம் உ.க.பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரமும், மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெறும் பயிற்சிக்குக் கொக்குவில் கொத்தணியதிபர் திரு. பஞ்சலிங்கம் அவர்களும் பொறுப்பாகக் கடமையாற்றுவார்கள் எனவும் தெரிகின்றது

# மீனவர்களை கரைக்குக் கூட்டிச்சென்றுதான் புலிகள் எச்சரிக்கவேண்டுமா?


### தமிழக சட்டசபையில் கேள்வி
### புதுக் கோட்டைக்கு அமைச்சர் விரைவு

(சென்னை)
தமிழகமீனவர் யாழ்ப்பாண மாவட்டக்கரையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீண்டும் பிடித்து வைத்துவிடுதலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி நேற்று தமிழ்நாடு சட்டசபையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பிரச்சினை கிளப்பப்பட்டது.

மீனவர் தடுத்து வைத்து விடுதலை செய்யப்பட்டது சம்பந்தமாக நேரில் நிலைமையை அறிந்துவருவதற்கு தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் புதுக்கோட்டைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவரது அறிக்கை கிடைத்தபின் அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படலாமென்றும் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி சபையில் தெரிவித்தார்.

முன்னர் ஒரு தடவை நாகபட்டினத்திலிருந்து சென்ற மீனவர்களுக்கு நடந்த கதியே இப்பொழுது புதுக்கோட்டை மீனவருக்கும் நடந்திருக்கின்றதென்று பிரச்சினையை கிளப்பிய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் குறிப்பிட்டார். யாழ்ப்பாணக் கரைக்கு மீனவர்களைக் கூட்டிச்சென்றுதான் எச்சரித்து விடுதலை செய்ய வேண்டுமா? என்றும் அவர் கேட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரும் அ. தி. மு. க எம். எல். ஏ. யுமான எஸ். ஆர். ராதா பேசுகையில் நமது கடல் பிரதேசத்திலேயே நமது மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றும் மத்திய அரசுடன் பேசி நமது மீனவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு இராணுவரோந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.



இந்திராகாங்கிரஸ் உறுப்பினர் திரு சிங்காரம் பேசுகையில் கடலில் எல்லைக்கோடு நிர்ணயிக்க முடியாதென்றும் தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பளிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்,

## பரீட்சை முத்திரைப் பணம் திருப்பித்தரப்படும்

(கொழும்பு)
ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களின் முத்திரைப் பணத்தை திருப்பிக் கொடுக்க பரீட்சைப் பகுதி தீர்மானித்துள்ளது. ஜனவரி மாதத்தில் நடைபெற்ற பரீட்சையில் பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதிபெற்றவர்களுக்கே முத்திரைப் பணம் வழங்கப்படவுள்ளதாம்.

பல்கலைக் கழக அனுமதிக்கான குறைந்த பட்ச புள்ளிகளைத் தீர்மானிக்க கிடைத்தாள்களை மறுபரிசீலனை செய்ய இரண்டு மாதங்களாகலாம் என்று பரீட்சைப் பகுதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### ஏப்பிரல் 16 - 21 ஆம் திகதி வரை

## அதிபர் தரத்திற்கான நேர்முகப் பரீட்சை

அதிபர் தரம் 1, அதிபர் தரம் 2 ஆகிய பதவி உயர்வுக்கான நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் பெரும்பாலும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு, தாமதமாகக் கிடைத்துள்ளன. இவ்வாசிரியர்கள், அதிபர்கள் எதிர்வரும் 16, 17, 18, 19, 20, 21 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர்

தில் கிடைக்காதவர்களும், பரீட்சை மேற்பார்வை கடமையில் ஈடுபட்டிருந்தவர்களும், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லையெனவும், அவர்களுக்குப் பிறிதொரு திகதி வழங்கும்படியும், சங்கப் பொதுச் செயலாளர் த மகாசிவம், கல்விச் சேவை ஆணைக்குழு உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வலியுறுத்திய போதே, கல்விச்சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட

### 1983 இல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதியான நிலையான சொத்துகள் சேதமடைந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது என வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் சி. கனகரட்னம் அவர்கள் நேற்று பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கும் போது குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில் எமக்கு மூலதன செலவாக 1983 ஆம் ஆண்டுக்குப் பின் எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை இது பற்றி அறு தொடக்கம் நாம் போக்குவரத்து அமைச்சுக்கு முறையிட்ட வண்ணமே இருக்கின்றோம் எதுவித பதிலும் இன்றுவரை கிடைக்கவில்லை

மேலும் வடபிராந்தியபோக்குவரத்துச்சபையின் ஏழு டிப்

## விளையாட்டுப்போட்டி பற்றி வேலணையில் கருத்தரங்கு

(வேலணை)
விளையாட்டுப் போட்டிகளின்போது ஏற்படுகின்ற சிக்கல்கள், பிரச்சினைகளுக்கு முதற் காரணம் விளையாட்டுகளுக்குரிய சட்டதிட்ட நடைமுறைகள் சரியாகத் தெரியாததே முதற் காரணமாக இருக்கின்றது.

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், விளையாட்டு நலன் விரும்பிகளுக்கு இடையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில்கலந்துகொண்டுரையாற்றிய யாழ் மாவட்ட மெய்வல்லுநர் பயிற்சியாளர் திரு: கே. டபிள்யூ. விமல்ராஜ் கூறினார்.

அவர் இக் கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றுகையில் விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படுகின்ற பல பல

மற்ற வீரர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டத்தையும், சிக்கல்களையும் எடுத்துரைத்தார்.

வேலணை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களைச் சேர்ந்த விளையாட்டுப் போதனாசிரியர் திரு பொ. பொன்னுச்சாமி, வேலணை மத்திய மகா வித்தியாலய விளையாட்டு ஆசிரியர் திரு செ. இராசலிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (14)

## ஸ்ரீ வள்ளி இசை நாடகம்

பாதிப்புற்ற சிறார்களுக்கான நிதிக்காகக் கைலாசபதி அரங்கில் கடந்த சனிக்கிழமை ஸ்ரீ வள்ளி இசை நாடகம் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக கலை வட்டத்தினர் ஆதரவில் யாழ் நாடக மன்றத்தினர் இதனை

## வான் தடம் புரண்டதால் ஆறு பேர் பலி ஐந்துபேர் காயம்

(சென்னை)
திருப்பதியிலிருந்து வேலூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த வான் ஒன்று நேற்று முன்தினம் காலை ஆந்திர மாநில சிற்றூர் அருகே கவிழ்ந்து விபத்து நேரிட்டபொழுது, வானிலிருந்த தமிழ்த்திரைப் படத் தயாரிப்பாளர் திரு. அருள்பிரகாசமும் அவரது குடும்பத்தினர் உட்படமேலும் ஆறுபேர் இறந்து போனார்கள் மேலும் ஐந்து பேருக்கு காயம் ஏற்பட்டது.

நான்குபேர் விபத்து நடந்த இடத்திலே இறந்தார்கள். இருவர் சிற்றூர் மருத்துவமனையில் மரணமடைந்தார்கள். காயமடைந்தவர்கள் அந்த மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்

பஸ் ஒன்றை கடந்துசென்ற வான் ரைவர் முயன்றபோது இந்த விபத்து நேர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது.

### அரசு-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

சினைகள் பற்றிப் பேசப்பட்ட போதும் விசேடமாக கிழக்கு மாகாணப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் பேச்சுக்கள் நடைபெற்றன. இதில் கிழக்கு மாகாண இணைப்பாளர்கள் கரிகாலன், காஸ்றோ, றூபன், சுரேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக முப்படைத் தளபதிகளுடனும், பாதுகாப்பு அமைச்சின செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவும் இன்று பகல் சந்தித்துப்பேசுவார்கள்.

### ஆயுதம்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகித்தார், இக் கூட்டத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 19 கிராம சேவையாளர் பகுதியிலுள்ள சிற்றூர் அவை பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 12 கிராம சேவையாளர் பகுதியிலுள்ள சிற்றூர் அவைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள், இக் கூட்டத்தில், முக்கியமாக சிற்றூரவை உறுப்பினர்கள் உண்மை, நேர்மை, கொள்கைப்பற்று இருக்கவேண்டுமென்றும், சாதி, மதம் பிர

## வீதி திருத்தவில்லை

(கல்லாறு-களுவாஞ்சிக்குடி)
நீண்ட காலமாக குறுமண்வெளி துறையிலிருந்துமகிளூர் ஊடாக ஒந்தாச்சிமடத்தில் மட்டக்களப்புபிரதானபாதையைச் சந்திக்கும் இரண்டரை மைல் நீளமான வீதி கவனிப்பாரற்று கிடக்கின்றது. துவிச்சக்கரவண்டியில் செல்வதுகூட இப்பாதையில் சிரமமாகஇருக்கின்றது.

இப்பாதையை அதிகமாகப் பயன்படுத்தும் விவசாயிகள் மீனவர் பால் வியாபாரிகள் ஆகியோர் பெரிதும் சிரமப்படு

தெரிவித்துள்ளார். இவர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவின் அழைப்பை மீண்டும் எதிர்பார்க்காமல், தாமாகவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாமெனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

அதிபர் பதவி உயர்வுக்கான அழைப்புக் கடிதங்கள், தபால் பகுதியினரின் காலதாமதத்தினால் உரிய நேரத்

ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு எஸ். பிரேமரட்னா மேற்கண்டவாறு தெரிவித்ததாகவும், ஏப்பிரல் 10 தொடக்கம் ஏப்பிரல் 15 வரை நேர்முகப் பரீட்சை தடைபெறமாட்டாது எனவும். சம்பந்தப்பட்டோருக்கு அறிவிக்குமாறும், தம்மிடம் தெரிவித்ததாகப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

## பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் கிராமசேவையாளர்களாக மாற்றம்

(பண்டத்தரிப்பு)

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும், விவசாயப் விரிவாக்க உத்தியோகத்தர்களும் கிராமசேவையாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் கமநலச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நெற்காணி வரி. பயிர் காப்புறுதி சந்தா என்பன பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் மூலம் அமுல் செய்யப்பட்டு வந்தது.

முன்னர் இந்த வேலைகளையும் இவர்களே செய்து வருவதற்குச் சில தினங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

ஆனால் தறபோது கிராம சேவையாளர் வேலைகளையே செய்ய வேண்டுமென அறிவிக்கபபட்டுள்ளதால் பொது மக்கள் தமது விவசாய வேலைகளுக்காக கமநலச் சேவை அலுவலகங்களுக்கு அலைகிறபர்கள்.

### ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட நிதியில்

## புனர்வாழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை வீரகத்தி பிள்ளையார் ஆலயத்துக்கு இருபது ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு ஆறு மாதங்களாகியும் எதுவித புனரமைப்பு வேலைகளும் நடைபெறவில்லை.

இதற்காக ஒருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அதில் இருபதாயிரம் ரூபா வழங்கப்பட்டிருந்தது,

இந்த வேலைகள் ஆரம்பிக்கப்படாததால் வழங்கப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கு ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல வேறு ஆலயங்களுக்கும் புனர்வாழ்வுக்காக பணம் வழங்கி வேலைகள் ஆரம்பிக்கப்படாவிட்டால் அவ்வளவும் மீளப்பெறப்படும் என மாகாண சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போக்களிலும் உள்ள பழுதுபட்டபஸ்களைதிருத்துவதற்கு ஒரே ஒரு வேலைத்தளமே எம்முடன்உள்ளது. மல்லாகத்தில் அமைந்திருக்கும் வேலைத்தளத்திலிருந்து அண்மையிலேயே இந்திய இராணுவம் வெளியேறியுள்ளது அதனை உடன் திருத்தி அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவைப் புனர்வாழ்வு அமைச்சிடம் கேட்டு விண்ணப்பித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ் பஸ் நிலையத்தை புனரமைப்பது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில் 1976 ஆம் ஆண்டுக்குப்பின் யாழ். பஸ்நிலையம் எதுவித திருத்த வேலைகளும் செய்யப்படவில்லை என்றும் கிளிநொச்சி பஸ் டிப்போவும் 40லட்சம் ரூபா திட்டமிடப்பட்டும் 5லட்சம் ரூபா செலவிடப்பட்டு அத்திவாரம் இடப்பட்ட நிலையில் கைவிடப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இறுதியாக அவர் கூறுகையில் இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் வேலைசெய்யவேண்டிய நிலையில் எமது ஊழியர்கள் உள்ளனர்என்றார் (லோ)

### ஆர்வம் காட்டும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளையை வேறு துறையில் சேர்ப்பிக்கக்கூடாது. என அமைச்சர் குறிப்பிட்டார்.

பிள்ளைகள் ஆர்வம் காட்டும் துறையில் பயிற்சி வழங்குவதால் நல்ல பயனையும் பெறலாம் எனவும் அவர் சொன்னார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிகாரே கல்வி, உயர் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

களில் ஏற்படுகின்ற பல பல பிரச்சினைகளையிட்டு மிகவிரிவாக எடுத்துரைத்ததுடன், ஒவ்வொரு விளையாட்டுகளிலுமுள்ள சட்டதிட்டங்களையும் வீரர், வீராங்கனைகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்ஓடும்பாதை(சுவட்டு)யை விட்டு விலகி ஓடுவதால்

### இலங்கைத் தமிழ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடி ஆராய வேண்டும் என்று தொண்டமான் டெல்லியை வற்புறுத்தியுள்ளாராம். மனிதநேய அடிப்படையில் இரு நாடுகளும் கூடி இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண வேண்டிய காலம் இதுதான் என்று தொண்டானை மேற்கோள் காட்டி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

160,000 தோட்டத் தொழிலாளர்களில் ஏறக்குறைய 80 000 பேர் இந்திய கடவுச்சீட்டுக்களைப் பெற்றுள்ளார்கள் என்றாலும் அவர்களுக்கு இந்தியா திரும்ப விருப்பமில்லை என்றும், இவர்களுடைய தாய், தந்தையரும், பாட்டன்மாரும் தான் 25 வருடங்களுக்கு முன் இந்திய பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்தார்கள் என்று தொண்டமான் தெரிவித்தார். இதே வேளை இந்திய பிரஜாஉரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் அநேகர் இறந்து விட்டார்கள் என்றும், புதிய தலைமுறையில் இப்போது இப்பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. என்று தொண்டமான் தெரிவித்தாக ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாரம் கூடவிருக்கும் கூட்டுப் பொருளாதாரக் கமிஷன் கூட்டத்தில் ஸ்ரீலங்கா அரசு இவ்விடயம் குறித்துப் பேசத் தயாராகவுள்ளதென்றும், ஆனால் ஸ்ரீ லங்கா அரசின் நிலைப்பாடு பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று தொண்டமான் தெரிவித்தார்.

நாடக மன்றத்தினர் இதனை மேடையேற்றினார்கள்.

### நெடுந்தீவு.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவின் குடிநீர் வழங்கலுக்காக தண்ணீர் பவுசர் ஒன்றையும், இரண்டு சக்கர உழவு யந்திரம் ஒன்றையும், செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஏற்கனவே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். விரைவில் அம்புலன்ஸ் படகினை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் உறுதியளித்தனர்.

### கடந்த....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருடம் ஐயாயிரத்து இருநூற்றி அறுபத்தேழு இலங்கையைச்சேர்ந்த ஆண்களும் பிடிபட்டுள்ளனர் இவர்களில் முன்னூறுபேர் 15 வயதுக்கும் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இதே போல 15 வயதுக்கு உட்பட்ட ஆறு சிறுவர்களும் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெண்களில் இருநூற்றி முப்பத்தொருபேர் பிடிபட்டுள்ளதாகவும், அவர்களில் தொண்ணூற்றி ஐந்துபேர் 25க்கும் 29க்கும் இடைப்பட்ட வயதுடையவர்களாவர்.

இவர்கள் யாவரும் இந்திய உப கண்டத்திலிருந்து போதைப்பொருளைக் கடத்தி வந்தபோதே கட்டுநாயக்காவில் கைது செய்யப்பட்டனர்.

### சிறுவர்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளைகளை அனுமதிக்கும் விடயத்தில் இனிமேல் அதிபர்களின் பொறுப்பிலேயே விடப்படும். இதில் அரசியல் தலையீடு எதுவும் இடம்பெறாது.

வசதி குறைந்த நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு சகல வசதிகளும் வழங்கப்படும் எனவும் சொன்னார்.

மென்றும், சாதி, மதம் பிரதேசப் பிரிவினை, கஷ்டப்பட்டவன், ஏழை என்று பார்க்கக்கூடாது என்றும் அன்பால், பண்பால், சேவையால் மரியாதையால் எவரையும் அணைக்கவேண்டும் என வற்புறுத்திப் பலரும் பேசினார்கள்.

### வீரமரணமடைந்த...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

லைப்புலிகள் இதுவரை வீரமரணமடைந்தார்களே- அவர்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் தமிழீழ மண்ணில் உயிர் நீத்த வீர விடுதலைப் புலிகளுக்கு இன்று தனித்தனியாக நினைவுச் சின்னங்கள் எழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளபபடுகின்றன.

பல நினைவுச்சின்னங்களுக்கு சிந்ததாமல் சிதறாமல் செலவு செய்யும் பணத்தை எல்லா வீரவேங்கைகளையும் நினைவு கொள்ளும் விதத்தில் ஒரு நினைவு மண்டபமாய் - நினைவுச் சின்னமாய் எழுப்பப் பயன்படுத்துதல் நன்றல்லவா!

அதுமட்டுமல்ல நகர்ப்புறங்களில் நெரிசலான இடங்களில் தெருச்சந்திகளில் நினைவுத்தூபிகள் நடப்படுகின்றன பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் தொல்லை என்றால் அதற்கான பொறுப்பையும் எமதியக்கமே ஏற்கவேண்டியுள்ளது.

எனவேதான் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு நினைவுச் சின்னங்களை அமைக்க விரும்புவோர் அனைவரையும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

### லிகுவா......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைப் பதவியிலிருந்தும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ராஜினாமாச் செய்யப் போகிறாராம்.

ஆகியோர் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இவ்வீதியைப் புனரமைப்பதற்கான ஒதுக்கீடு ஏற்கனவே உலக வங்கியிடமிருந்து வந்துக்சேர்ந்துவிட்டதாக அறியகூடியதாக இருக்கின்றது.

(45)

### கூட்டுறவுச்.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றஇக் கூட்டத்திற்கு நூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள் சமுகந்தந்திருந்தனர். தமது தலைமையுரையில் திரு. ராஜன் குறிப்பிடும் பொழுது விடுதலைப் புலிகள் சுதந்திரப் போராட்ட வீரர்கள். இவர்கள் தமிழர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு என்றே தமது அனைத்தையும் தியாகம் செய்தவர்கள். ஈழத் தமிழர்களுக்குமட்டுமன்றியுலகிலுள்ள எட்டுக் கோடி தமிழர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஒரு ஸ்தாபனமாக இவர்கள் ஒருநாள் மாறுவார்கள் என்று குறிப்பிட்டதுடன்,

விடுதலைப் புலிகள் உங்கள் பிள்ளைகள். இவர்கள் அணிந்துகொண்டது ராணுவஉடையாக உங்கள் பார்வைக்குப் பட்டாலும் உங்கள் பிள்ளைகள் என்ற நினைப்பு என்றும் உங்கள் மனதில் நிலைத்திருக்க வேண்டும் என்பதே உங்கள் பிள்ளைகளாகிய எங்களது விருப்பம்.

மேலும் நாம் எம்மைத் தூய்மைப்படுத்துவதற்கு உங்கள் ஆதரவு எமக்குத் தேவை. நாம் விடும் ஒவ்வொரு தவறுகளையும் சுட்டிக் காட்டுவது உங்கள் கடமையே. அதுவே நாம் தொடர்ந்தும் அதே தவறுகளை இழைக்காது தடுக்க உதவும் என்றும் அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் மேலும்வலிகாம அரசியல் இணைப்பாளர் ஆஞ்சநேயர் உட்பட பல கூட்டுறவுச்சங்கத் தலைவர்களும், ஊழியர்களும் உரையாற்றினர்.

(லோ,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது